www.padippakam.com

# ஒரு அகதியின் கைரேகை



இணுவை சக்திதாசன்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# ஒரு அகதியின் கைரேகை

இணுவை சக்திதாசன்

●

இணுவை இளந்தென்றல் வெளியீடு
டென்மார்க்

படிப்பகம்

www.padippakam.com

| | | |
|---|---|---|
| நூல் | : | ஒரு அகதியின் கைரேகை |
| முதற்பதிப்பு | : | ஏப்ரல் 2009 |
| ஆசிரியர் | : | இணுவை சக்திதாசன் |
| நூல் ஆக்கம் | : | கவின் கிராபிக்ஸ். |
| | : | Cell: 94443 12632 |
| Mail | : | kavinoviya717@gmail.com |
| நூல் வடிவமைப்பு | : | சத்யன் லே-அவுட் |
| வெளியீடு | : | இணுவை இளந்தென்றல் வெளியீடு, |
| | : | *Kiledvangsparken - 36* |
| | : | *4390 vipperød, Denmark.* |
| | : | Ph: 0045- 47761019 |
| | : | Cell: 0045-26706931 |
| | : | E-mail:sakthy-@hotmail.com |
| விலை | : | ரூ.70/- |

படிப்பகம்

www.padippakam.com

# சமர்ப்பணம்

அகதியாய்
புலத்தில் இருந்தாலும்
தாய் நிலத்தில்
தன்
இனத்தின்
பேரவலங் கண்டு
பொங்கியெழுந்து
''சுவிஸ்-ஜெனிவா''
ஐ.நா.சபையின்
முன்..
நீதி கேட்டு
உயிரோடு தீக்குளித்து
வரலாறு படைத்து சென்ற
மானத் தமிழன்
**முருகதாசன்**
அவர்களுக்கு!

படிப்பகம்

# பதிப்புரை

''இணுவை இளந்தென்றல்'' பதிப்பகத்தின் முதல் வெளியீடு இது. ஏற்கனவே மல்லிகைப் பதிப்பகத்தார் வெளியிட்ட கவிஞர் சக்திதாசனின் ''காற்றை கானமாக்கிய புல்லாங்குழல்'' பெரிதும் வரவேற்பை பெற்றது. எந்தக் கண்டங்களில் எறும்பு போல் தேனி போல் வாழ்ந்தாலும் தமிழ் தாம் எம்மொழி அதன் செவ்விய உயிரோட்டம் கொண்டு ஆற்றலுடன் கவிதை புனைவோம் என கிளர்ந்தெழுந்த புலம்பெயர் கவிஞர்கள் வரிசையில் சக்திதாசன் படைப்புகள் தனித்திறன் பெற்றவைகளாய் தமிழ் கூறும் நல்லுலகில் பெரிதும் பாராட்டப் பெறுகின்றன.

இணுவை இளந்தென்றல் பதிப்பகம் இப்போது முதன் முதலாய் புயலைப் பிரசவித்திருக்கிறது. படியுங்கள்! இது வாசிக்க மட்டுமல்ல. சுவாசிக்கவும்தான். பதிப்பகங்களை வளர்ப்பவர்கள் பல நூல்களை படித்துக் கொண்டிருக்கும் நீங்கள்தான் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

என்றென்றும் உங்கள் ஆதரவை நாடும்

**ராஜினி சக்திதாசன்**
**இணுவை இளந்தென்றல் பதிப்பகம்.**

www.padippakam.com

# வாழ்த்துக்கள் சக்திதாசன்

சக்திதாசனை ஒரு அவசரமான வேலைப்பளுமிக்க மாலைப்பொழுதில் தீபம் தொலைக்காட்சி அலுவலகத்தில் தான் முதன் முதலில் சந்தித்தேன். பழக ஆரம்பிக்கும் போதே ஒரு நெருக்கத்தை உணர்ந்தேன். டென்மார்க் வந்தால் உமது டாக்சியில் எல்லா இடமும் சுற்றி காண்பிக்க வேண்டும் என்ற சுவாரஸ்யத்துடன் ஆரம்பமானது எமது சந்திப்பும்-உரையாடலும்.

தொலைக்காட்சிக்கான பேட்டி, கவிதைகள், புலம்பெயர் வாழ்வு தொடர்பாகவும் பேசினோம் ''லண்டன் தீபம் தொலைக்காட்சி நேரடி ஒளிபரப்பில்'' கவிதை நேரம் ஒன்றில் நேரடியாக கலந்துகொண்டோம்.

டென்மார்க் போன பின்பு ஒரு அகதியின் கை ரேகை யை அனுப்பி வைத்தார்

''அகதி'' என்ற வார்த்தை தொடர்பாக என்னோடு

www.padippakam.com



பலர் வாதப்பட்டுள்ளனர். அகதி என்பது ஒரு இழி சொல் என்கின்றனர் சிலர். ஆனால் நாங்கள் அகதிகள் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. இதுதான் என் வாதம்.

நான் ஒரு செவ்வி முடித்து ஸ்டுடியோவில் இருந்து வெளியில் வந்த ஒரு நாள் எனக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. தொலைபேசி எடுத்த அன்பர் சொன்னார். என்னை கண்டிப்பதாகவும் புலம் பெயர் தமிழர் என்ற சொல்லை பாவிப்பதற்கு, எனக்கு தனது ஆட்சேபணையையும் தெரிவித்தார். இடம்பெயர்ந்த தமிழர்கள் என்று சொல்லச் சொல்லி வற்புறுத்தினார். ஆனால் எனக்கு எப்போதும் வாதாடுவதில் உடன்பாடில்லை. ஆனால் புலம் பெயர்வு என்பதற்கும் இடம் பெயர்வு என்பதற்கும் ஆன வித்தியாசம் தொடர்பாக எனக்கு எந்த சிக்கலும் இருக்கவில்லை.

இங்கு அகதிகளாக புலம் பெயர்ந்து வந்ததன் பின்பு ஏற்படுகின்ற வாழ்வின் மாற்றங்கள் தொடர்பாக நாம் எல்லோரும் தினம் அனுபவிக்கிறோம். ஒவ்வாத காலநிலை, வேலைப்பளு, வாழ்வின் மாற்றங்கள் கலாச்சார மாற்றங்கள், மொழிப் பிரச்சனை எல்லாமே நெருக்குதல்கள்.

பிள்ளைகளை வளர்க்க ஆலாய் பறக்கிறோம். எங்களுடைய வளர்ப்பு போல அவர்களை வளர்க்க முடியவில்லை.

திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், மன்னார் என்று நாங்கள் வளர்ந்த வாழ்விடங்களைப் போல, எங்கள் அப்பாவும் அம்மாவும் வளர்த்ததைப் போல இல்லாமல் அவர்கள் எங்களை விட்டு விட்டு எங்கேயோ ஓடிக் கொண்டிருக்கிறனர்.

இதெல்லாம் அகதிகளான எங்களுக்கு கிடைத்த வாழ்வின் மிச்சங்கள். ஏன் செத்த வீட்டைக் கூட கொண்டாட முடியாமல் மனது அமுங்கி போகிறது. பறையடித்து, பாடைகட்டி, பொரிதூவி, வெடி கொளுத்தி றோட்டால் சுடலைக்கு கொண்டு போகிறது வெறுமனே சடங்கு மட்டுமல்ல ஒரு இறப்பை இறப்பென்று உணருவதற்கான, மனதில் வீட்டார் பதிவதற்கான சடங்கு. பிரேதத்தை வீட்டில் வைத்து ஒப்பாரி வைத்து மனப்பாரம் இறக்கி

www.padippakam.com



வைத்து வெறும் உடலை மட்டும் சுடலைக்கு அனுப்பிவைத்து விட்டு இறப்பின் பாரத்தை இறக்கி வைப்போம்.

காலப்போக்கில் இறப்பு ஒரு திதியாகிவிடும். மனது பாரமிறங்கி விடும். ஆனால் ஒரு அகதியை காரில் அள்ளிக்கொண்டு போய் மின்சார அடுப்பில் வைத்து விட்டு ஒரு பிடி சாம்பலை இங்கிருந்து கொண்டுபோய் கீரிமலையில் கரைத்து விட்டு வருகிறோம். அந்த சாம்பலுக்கு இமிக்கிறேசனில் எத்தனை கேள்விகளுக்கு பதில் சொல்ல வேண்டும்.

''சுமைக்குள்ளும்

தென்றலை தேடு

வியர்வையாவது

துடைக்கட்டும்''

என்ற சக்திதாசனின் கவிதையோடு நான் ஒன்றிப் போகிறேன். இலங்கையில் இருக்கின்ற எல்லோரும் இங்கு வெளிநாடுகளில் இருப்பவர்கள் பெரும் கோடிஸ்வரராக சுக போகத்தில் மிதக்கின்றார்கள் என்றே தினம் நினைத்துக் கொண்டிருக்கின்றனர்.

எனது நண்பன் ஒருவன் அடிக்கடி சொல்லுவான் ''எமது கஷ்டங்களை எல்லோருக்கும் எடுத்து சொல்ல வேண்டும். இல்லாவிடில் அவர்கள் இலங்கையில் இருந்து கொண்டு எங்களை பணக்காரர்களாகவே நினைத்துக்கொண்டிருப்பார்கள்'' கேட்கின்ற எல்லா தொலைபேசி அழைப்புக்களும் பணம், பணம் என்றுதான் கேட்கின்றன. ஆனால் இவன் ''அகதி'' யென்று சொல்லவேண்டும்.

ஒரு எழுத்தாளன் தொடர்ச்சியாக எழுதிக்கொண்டிருக்க வேண்டுமென்று எழுத்தாளர் சுஜாதா சொல்வார். தொடர்ச்சியான வாசிப்பு, எழுத்து என்பன எழுத்தாளனை வீரியமானவனாக்கும். சக்திதாசன் தொடர்ந்து எழுதிவருகிறார். அவரின் சில கவிதைகளை மறக்காமல் நினைவில் வைத்திருக்கிறேன்.

www.padippakam.com



‘‘காற்றைக் கானமாக்கிய புல்லாங்குழல’’ தொகுப்பிலிருந்து

‘‘கிழிஞ்ச காற்சட்டையோட

திரியுதுகள்

பிள்ளைகள்

கோமணமாவது தைக்கலாமா?

என்றாள் அவள்’’

வாழ்த்துக்கள் சக்திதாசன் தொடர்ந்தும் எழுதிக் கொண்டிருங்கள்.

**இளைய அப்துல்லாஹ்**
லண்டன்
(தீபம் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தொகுப்பாளர்)
24-02-2009

படிப்பகம்

# இந்தப் பாடுபொருட்கள் இலக்கியத்திற்குப் புதிது

இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி என ஆய்வாளர்கள் முன்மொழிந்ததிற்கிணங்க ஈழத்து இலக்கியத்திலும் அந்த அந்த காலகட்டத்தின் கலை, பண்பாடு, அரசியல் பிரதிபலித்து வந்துள்ளன.

குறிப்பாக இந்திய இலக்கியங்களை முன்னுதாரணப் படுத்தி, அவர்கள் இலக்கியமே தலையாய இலக்கியமாக அதன் மாயையில் மூழ்கிக் கிடந்தபொழுது 70களில் இலங்கையில் மண்வாசனையுடன் எழுந்த இலக்கியப் படைப்புகள் இந்திய இலக்கியவாதிகளையும் இலங்கையின் பக்கம் திரும்பி பார்க்க வைத்தது.

தேவைக்கதிகமான வர்ணனைகள், சோடனைகள் இல்லாமல் மலையாள எழுத்துகள் போன்று இயற்கையான இலக்கியமாக ஈழத்து இலக்கியம் இலங்கையின் வெவ்வேறு பிரதேசங்களில் இருந்து தோன்றலாயிற்று. யாழ்ப்பாண பிரதேசம், வன்னிப் பிரதேசம், கிழக்கிலங்கைப் பிரதேசம், மலைநாட்டுப் பிரதேசம் என அந்தந்த பிரதேசங்களைப் பிரதிபலிக்கும் வண்ணம் பல இலக்கிய வடிவங்கள வெளியாகின.

இவற்றில் சாதீயம், அடக்குமுறைகள், சுரண்டல்கள்,

www.padippakam.com



சீதனம் என்பனவையே ஏறக்குறைய அனைத்து புனைவடிவ இலக்கியங்களைகளையும் நிரப்பி இருந்தன.

இதே காலகட்டத்தில் இலங்கையில் தோன்றிய போராட்டச் சூழ்நிலையில், பலகாத்திரமான இலக்கியங்களின் தோற்றுவாய்க்கு சந்தர்ப்பங்கள் இருந்த பொழுதும், அரசியல் தலையீடுகள் காரணமாக கைவிலங்கிட்ட பேனாக்களினூடு சுதந்திரமான இலக்கியங்களின் பிரசவத்திற்குப் பதிலாக பல குறைப்பிரசவங்கள் நிகழ்ந்தமை கண்கூடு.

இந்த நிலைப்பாடுகளில் இருந்து முற்றாக விடுபட்டு 80களில் புலம்பெயர் இலக்கியங்கள் வெளியாகின. வடமுனை தொடங்கி தென்முனை வரை தமிழன் இடம்பெயர இடம்பெயர அவனுக்கு புதிது புதிதான பாடு பொருட்கள் கிடைத்தன. இங்கு தான் புலம் பெயர்ந்த எழுத்துகள் மிளிரத் தொடங்கின.

புலம் பெயர்ந்த வாழ்வு என்பது ஒரு வகையில் ஒரு புதுவிதமான பணத்தேடல் என்ற எண்ணம் தான் ஆரம்பத்தில் நிலவியது – எண்ணை வள நாடுகளுக்கு பணத்தேடலைத் தேடிச் சென்றது போல.

டென்மார்க் என்ற எனது சிறுகதையில் காட்டப்பட்டது போல, பாட சாலையுடன் சுற்றுலா போன 15 வயதுப்பெண் கர்ப்பமாய் வந்து நிற்க. நீதி கேட்கப் போன பெற்றோரை. வகுப்பாசிரியர் பார்த்து ஏன் நீங்கள் கர்ப்பத்தடை மாத்திரை கொடுத்து விடவில்லை என்று கேட்கும் பொழுது தான் புலம் பெயர்ந்த வலி தெரிந்தது.

நீங்கள் தாழ்த்தப்பட்ட சாதி வெளியில் நில்லுங்கள் என்பது வேறு. ஆனால் புலம் பெயர்ந்த நாட்டில் நாங்கள் எல்லாம் ஒன்று. . .எங்கள் வீட்டு விழாக்களுக்கு வாருங்கள் என்று அழைத்து விட்டு தேநீர் கொடுக்கும் பொழுது டம்ளர்களினாலும் கிளாஸ்களினாலும் பாகுபாடுபடுத்தும் பொழுதும். ஆலத்தி எடுக்கும் பொழுது சாதி பார்த்து ஆலத்தி தட்டைக் கொடுக்கும் பொழுதும் புலம் பெயர்ந்த வாழ்வின் போலிகள் வெளித்தெரிகின்றது.

இந்தப் பாடுபொருட்கள் எங்கள் இலக்கியத்திற்குப் புதிது. புதிதான

www.padippakam.com



எதுவும் பழையனவற்றுக்கு வலுச்சேர்க்கும் என்ற கோட்பாட்டின்படி இப்புலம் பெயர்வாழ்வின் அனுபவங்கள் எம் புலம்பெயர் எழுத்தாளருக்கு கைகொடுக்கின்றன - சக்திதாசன் உட்பட.

கம்யூட்டர், இணையதளம், மின்னஞ்சல் என்பன புலம் பெயர்ந்த வாழ்வின் ஒரு பகுதியாகி விட்ட நிலையில் சக்திதாசனும் கடவுளுக்கு தனது கவிதை மூலம் மின்னஞ்சல் அனுப்புகின்றார். அன்னம் விடு தூது, கடவுளுக்கோர் கடிதம் என்ற நிலை மாறி கடவுளுக்கு மின்னஞ்சல் அனுப்புவது இங்கு புதிய யுக்தியாகின்றது.

அகதி என்பதற்கு ''முகத்தை தொலைத்த மனிதா'' என்பதை எழுதப்படாத வரைவிலக்கணமாய் கொண்ட புலம் பெயர் வாழ்வில் சிங்கப்பூரில் வைத்து சக்திதாசனின் கையில் ஏஜண்ட் பாஸ்போட்டைக் கொடுத்து, ''இனி உன் பெயர் அப்துல்லா'' என்கின்றான். வாசகனாகிய எனக்கு அது வலிக்கிறது.

கல் தோன்றி மண் தோன்றா காலத்தில் முன் தோன்றிய மூத்தகுடி என மேடைகளில் வீரமுழக்கம் இட்ட எம் தமிழ் இனத்தின் இன்றைய நிலையை,

தன் மான
தீப மெரியுது
தமிழனுயிர்தான்
கருகுது... என மனம் வாடுகிறார்.

இது வன்னிக்கும் பொருந்தும், வடபுலத்தில் வாழும் எம்மவர்க்கும் பொருந்தும்.

மேலும் அகதி என்ற முகமூடியை ஐரோப்பாவில் தந்தை போட்டுக் கொள்ள அவன் பிள்ளையோ,

நான் பிறந்தது
பதுங்குக் குழியில்

www.padippakam.com



வளர்ந்தது

அகதி முகாமில்

என வன்னிக் காட்டில் அகதியாகும் நிகழ்வு அருமை.

கனவு மெய்ப்பட வேண்டும் என்ற கவிதையில் சக்திதாசன், காணி பூமிக்கும், பத்து பன்னிரண்டு தென்னை மரத்துக்கும் கனவு காணாமல், ஊரில் உள்ள தன் சொந்தங்களுடன் அகதிவாழ்வின் இன்னல்களை மனம் விட்டு கதைக்க எண்ணும் பொழுது ஐரோப்பாவில் மனிதர்கள் தனிமைப்படுத்தப்பட்டு விட்டதை வேதனையுடன் வெளிக்கொணருகின்றார்.

இந்த புலம்பெயர்ந்த வாழ்வின் வேதனைகளை வெளிப்படுத்தும் அதே வீச்சில் அன்றாடம் இலங்கையில் நடக்கும் இனஅழிப்பை கண்டு மனம் கொதிக்கின்றார். கண்ணீர் வடிக்கின்றார். கவிதையாய் வெளிக்கொணர்கின்றார். அவரில் உடல் இங்கும், ஆன்மா அங்கும் என அவலப்படும் வேதனைகள் அவரின் கவிதைகள் எங்கும் விரவி நிற்கின்றன. ஏன்றோ ஒருநாள் கலவரம் நடந்தது என்ற நிலைமாறி தினம் தினமும் வாழ்க்கையே கலவரமானப் போன தன் இன மக்களுக்கு கவிதை முழுவதிலும் இரத்தக்கண்ணீர் வடிக்கின்றார்.

முருங்கமரத்து

மசுக்குட்டியாய்

பதுங்கி, பதுங்கி

ஒளித்தது ஏனோ

அடிமரத்துக்குள் தான். . . .

இனி எங்கு ஓடுவது என்ற கேள்வியையே இன அர்த்தத்தின் பயங்கரத்தை காட்டப் பயன்படுத்தியிருக்கின்றார்.

அதேபோன்று ஊடகவியலாளர்கள் இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட பொழுது,

விதை கூட

மண் கிழித்தெழும்புது

www.padippakam.com



வீணாய் எம்

வாழ்வு மண்ணில் புதைவதா? என தம் சக உறவுகளிடம் கேள்வி கேட்டுவிட்டு,

நிரபரதிகளே

குற்றவாளிகளாய்

குற்றவாளிகளே

நீதிபதிகளாய் என நாட்டுநடப்பை தன் கவிதைக்கண்ணாடியில் படம்பிடித்துக் காட்டுகிறார்.

புலம் பெயர்ந்த எம் சந்ததியின் கண்ணுக்குத் தெரியாத சோகம் யாதெனில் நாங்கள் அங்கும் சுகமாக இருக்கவில்லை. இங்கும் சுகமாக இருக்கவில்லை.

அதனை அங்கிருப்போரும் அறிவதில்லை - இங்கிருப்போரும் புரிவதில்லை.

தொலைத்து விட்ட வாழ்வைத் தேடி தேடி. . . கிடைத்த வாழ்வைத் தினம் தினம் தற்கொலை செய்யும் பேரவலம் அவரது கவிதைகளில் மெத்தப்பரவி நிற்கின்றது.

மேடைக்கவிஞன், பாடலாசிரியர், நாடக இயக்குனர், நடிகன், அறிவிப்பாளர் என்று பன்முகம் கொண்ட சக்திதாசன், அண்மைக் காலமாக புதுக்கவிதையில் காட்டும் ஈடுபாடும் தேடலும் அவரை புடம் போட்டு மிளிர வைத்திருப்பதை இந்த தொகுப்புக்கூடாக பயணிக்கும் பொழுது நன்கு கண்டு கொண்டேன்.

அவரின் தேடலும் பயணமும் இன்னும் பல மைல் கற்களைத் தாண்ட, ஆண்டவனை வேண்டி. . .

அன்புடன்

**வ. ஜீவகுமாரன்**

தமிழ்ப்பகுதி ஆலோசகர்

வெளிநாட்டு அரச நூலகம் - டென்மார்க்

படிப்பகம்

# இலக்கிய உலகுக்கு ஒரு புதிய பிரசவம்

**பு**லம்பெயர் சூழலும் அந்த சூழலுக்கு இசைந்து வாழ்ந்தாக வேண்டிய காலத்தின் வரைபுகளும் இழந்து போய் நினைவுகளில் மட்டும் எப்போதும் வலியெடுத்துக்கொண்டிருக்கும் எம் தாய்த்தேசம் பற்றிய நேசமும் கவிதைகளின் பால் காதல் கொள்வோரை அதிக உற்பத்தியாக்கிக் கொண்டிருக்கின்றது. இந்த உற்பத்தியின் இயங்குநிலைப் புள்ளியில் இருந்து புத்துருக்கொள்ளும் கவிதை வடிவங்கள் அழகானவையாகவும் அபூர்வமானவையாகவும் அதிசயம் கலந்த ஆச்சரிய உணர்வுக்கு வாசகனை இழுத்துச் செல்லும் உணர்வுத் தொற்றுகை நிரம்பியவையாகவும் இருந்துவிடுகின்றன.

இந்த உணர்வுத் தொற்றுகையை வாசகனில் அப்படியே அச்சொட்டாக பதியவைக்கும் முயற்சியின் ஒரு திருப்தியடையக் கூடிய செயற்பாடாகவே இணுவை சக்திதாசனின் 'ஒரு அகதியின் (கை)ரேகை' என்ற கவிதைத் தொகுதி தமிழ் உலகுக்கும் கவிதை உலகுக்கும் அறிமுகமாகின்றது. 'எட்டப்படாத வானம' முதல் 'கறுப்பு யூலை' வரை இத் தொகுதியின் எல்லாப் பக்கங்களையும் தேசம் பற்றிய வாஞ்சையுணர்வுடன் கூடிய பவிதை வரிகள் அழகு செய்திருக்கின்றன.கவிதை என்ற இலக்கண வரம்புக்குள் அவை அழகு செய்யப்பட்டுள்ளன என்று கூறினால் கூட மிகையாகாது. குறியீட்டுத் தத்துவங்களாலும் மறைபொருள் உருவக உவமைகளாலும் சிலேடைத்தனத்து வித்துவப் போக்குகளாலும் கவிதை இரசனையை மூளையால் மட்டும் சுவைக்கத் திணிக்கும் தற்காலக் கவிதையியல் உலகில் இணுவை சக்திதாசன் தனக்கேயுரிய தனித்தன்மையுடன் இலகு வடிவில் உணர்வுகளால் புரிந்து கொள்ளும் பக்குவத்துடன் தனது கவிதைகளை, இத் தொகுப்பில் தந்திருக்கின்றார்.

இலக்கிய உலகுக்கும் கவிதை உலகுக்கும் ஒரு புதிய பிரசவம் நிகழ்ந்திருக்கின்றது. இந்த உற்பத்திப் புள்ளி தூவும் விதைகள் மனித மனங்களின் நோவுகளுக்கு ஒத்தணம் கொடுக்கும் ஒவ்வொரு கணமும் சக்கிதாசன் நினைந்துகொள்ளப்படுவான் என்பது மட்டுமே உண்மை. செய்து முடித்த பணிகளுக்கு தலை வணங்கி செய்ய முனையும் முனைப்புகளுக்கு வாழ்த்துக்கூறி நிற்கின்றேன்.

அன்புடன்
**சாம் பிரதீபன்**



# முக்வுரையோ மதிப்புரையோ அல்ல ஓர் தமிழ்க் கவிஞனின் அகவுரை

இந்தத் தூக்கியெறியப்பட்ட கண்ணிர் காயங்களான கவிதைத் தொகுப்புக்கு ஒரு அகதியின் கைரேகை என தலைப்பிட்டிருக்கும் ஈழக் கவிஞர் இணுவை சக்திதாசன் புதுமைக் கவிதாசன்தான்.

அவலங்களைக் கூட ஆற்றொழுக்காய்ச் சொல்லும் ஆற்றல் இருக்கிறது இவரிடம். ''உத்தமர்தம் உறவு வேண்டும்'' என்று பாடும் வள்ளலாரைப் போல ஊரும் இனமும், அதன் உணர்வும் வேரை நாட வேண்டும் என எழுதுகிறார்.

**பதுங்குக் குழியில் பிறந்து**

**அகதி முகாமில் வளர்ந்து**

**சிறைக் கூடத்தில் சிந்திக்கக்**

**கற்றுக் கொண்ட எமக்கு**

**இன்னும் சுதந்திரம் கிடைத்தபாடில்லை** என்ற கவிதைப் புலம்பலில் அவர்தம் உள்ளம் அழுகிறது.

உயிராயுதம் ஏந்தி தீக்குளித்த முத்துக்குமரனின் தியாகத்தில் நிச்சயம் ஒருநாள் உலக மனசாட்சியின் பூட்டிய கதவுகள் திறக்குமெனும் அனல் பறக்கும்

www.padippakam.com



இரங்கற்கவிதை நம் இதயங்களைப் பிழிகிறது.

செத்த உடலையும் வெட்டிய சிங்கள ஆட்சியரின் கோரத் தாண்டவம் உள்நெஞ்சில் கொழுந்துவிட்டு எரிகிறது. நெருப்பாய் தகிக்கும் அந்த கறுப்பு ஜூலை 83-ஐ என்னிலிருந்து இன்னும் அழிக்க முடியவில்லை என்கிறார்.நாடும் மொழியும் வேறல்ல என்றால் நமக்கு ஏன் அகதி வாழ்க்கை? புலம்பெயர் அவலத்தில் புகுந்து அழிவதை விட கருவிலே சிதைவது மேல் என்ற இவரின் கவிதை அவ்லச் சுவையில் நாம் அவ்வப்போது அமிழ்ந்தே போகிறோம். ஆனாலும் தமிழனாய்ப் பிறந்துவிட்டோம்! வாழும் வரை போராடுவோம் என்ற தன்னம்பிக்கை ஒளியை வைத்து தனிப்பெரும் விழிப்புணர்வை தம் கவிதையில் ஏற்றுகிறார் சக்திதாசன்.

ஒரு ஊடகவியலான் புதை குழியில் குண்டு பாய்ந்து மரணித்தபின் அவன் பக்கத்தில் கிடந்த பேனா ''உண்மைகளை உன்னோட புதைத்துவிட்டுப் போன ஊடகவியலானே!

**உன்னுள் உறைந்த எல்லாவற்றையும்**
**வெளிக் கொண்டு வந்துவிட்ட**
**பின்தான் என்னுயிர் பிரியுமென''** பேனா ஒன்று பேசும் கவிதை ஊடகவியலாரின் உரிமைச் சாசனக் கல்வெட்டாய் நிற்கிறது.

**இங்கே தமிழன் அகதி**

**அங்கே தமிழன் அகத்தில் தீ** (வீட்டில்) ஒவ்வொரு நாட்டு ஆட்சியாளர்களிடமும் இதைச் சொல்லிச் சொல்லி மனித நேயப் பிச்சை எடுத்து விடிவு வரும் வரை அங்கே ஈழத்தில் ஒரு தமிழனாவது இருப்பானா என்ற வலிமைமிக்க வரிகளில் வலிக்கிறது மனது நமக்கு.

**சமூக அவலங்களுக்கு எதிராக தீராத பெரும் கோபமாய் மனிதாபிமானிகளின் கைகளிலிருக்கும் குத்தீட்டியாய் கவிதைகளை தந்திருக்கிறார் சக்திதாசன். எல்லா கவிதைகளுமே நெருப்பு துண்டுகளை சுமந்த சாம்பலைப் போல இருக்கின்றன.** திட்டமிட்ட இனக்கொடுமைக்கு எதிராக அடிக்கடி அறிவாயுதம் ஏந்துகிறது இவரது பேனா. மனசை அறையும் பாடு பொருட்கள்

www.padippakam.com



இவரை முற்போக்குச் சிந்தனைக் கவிநாயகனாக அடையாளம் காட்டுகிறது. கால்களை வெட்டி விட்டு முழங்காலுக்கு சலங்கை கட்டும் உலக மனசாட்சிகளின் உணர்வினை திறக்க முயற்சிக்கிறது இவரது கவிப் போராட்டம்!

**இயேசுவே! நீசர்கள் உம்மைச்**
**சிலுவையில் அறையும் போது**
**ஏன் எனை கைவிட்டீர்**
**என பரமபிதாவிடம் கேட்டீர்.**
**நான் உங்களை கேட்கிறேன்**
**இயேசுவே எம்மை ஏன் கைவிட்டீர்?**

**நாங்கள் தமிழனாய் பிறந்தது தவறா?** என்ற கவிதை வரிகள் மனங்களில் சோக கீதங்களைச் சேர்க்கின்றன.

சக்திதாசன் செந்தணலில் வெந்தெரியும் தேசத்தை நினைத்து ஒரு படைப்பாளிக்கு இருக்க வேண்டிய சமூகப் பொறுப்புடன் பாய்ந்து பயணிக்கிறார். இதயத்தை இடம் பெயரச் செய்துவிட்டு மூளையால் மட்டுமே முன்னேறி வசதியாய் வாழ்பவர்களைப் போல கொலைக்களம்பட்டு விழுகின்ற பிணங்களை புதைப்பதற்கு இடம் போதாமல் சடலங்களே பிணக்குழியாகும் கொடுமை குறித்து புரட்சிப் போர் நிகழ்த்துகிறது இவரது கவிதை.

ஒரு குடுகுடுப்பைக்காரன் கூட ஈழ மண்ணில் நல்ல காலம் பொறக்குது என்ற சொல்ல முடியாது என்று நான் அடிக்கடிச் சொல்வேன். ஆனால் அதை இவர் பேனா படபிடிப்பே நடத்தியிருக்கிறது.

**இந்த கவிஞனின் அக்னி எழுத்துக்கள் ஈழக் கவியரசர் காசி அனந்தனின் கவிதா நெருப்பு அணைந்துவிடாமல் பற்றித் தொடரும் பாதையில் பயணப்பட்டிருக்கிறது. சக்திதாசன் போன்ற உணர்ச்சி கவிஞர்கள் புலம் பெயர் வாழ்வில் நம் தமிழ் ஈன்ற கவிப் போராளிகள். இந்த தலைமுறையின் இளஞ்சிங்கங்கள்.**

www.padippakam.com



ஒரு தேங்காய்த் துண்டை எடுக்கலாமா வேண்டாமா என அஞ்சி அஞ்சி அருகில் ஓடும் காகங்களைப் போல் தம் மண்ணின் மைந்தர்கள் படும் துயரங்களை தம் கவிதை விதைக்குள் உயிர்க்காற்றாய் ஊடுருவச் செய்திருக்கும் சக்திதாசனின் கவிச் சிறகுகள் வானம் தொடட்டு மேலே பறக்கட்டும். காலத்தின் கறுப்பு வரைபடத்தை கந்தக வரிகளால் அவர் கவிதைக் கத்தரித்துப் போடட்டும்.

முகம் தெரியாத ஒடுக்கப்பட்ட தமிழனின் மீட்சிக்கான போராட்டத்தில் அவலமாய் ஓலமாய் கூக்குரல் கூட்டுக் குரலாய் ஒலிக்கும் போது சில பல உடல்கள் செத்து விழுந்தாலும் அவை வாழ்வின் வித்துக்களாய் எழும் என்ற வரலாற்று உண்மை எழுத்துக்களில் பளிச்சிடுகிறது.

ஒரு கவிதைத் தொகுப்பு தேவையான அக்கறையுடன் சமூக அவலங்களையும் அதற்கான தீர்வுகளையும் அலசி ஆராய்ந்து வாழ்வியல் ஏற்றத்திற்கான வழிகளைச் (Popd) சொன்ன இந்த மாபெரும் கவியாளனின் எழுத்துக்களில் நாளைய ஈழ விடியலின் நம்பிக்கை தெரிகிறது.

இந்நூலாக்கத்திற்கு நான் ஒன்றும் பெரிதாய் எதுவும் செய்துவிடவில்லை. நம் தமிழர்கள் உயிரை மாய்த்து உரிமைக்காய் போராடும் நேரத்தில் என் சக கவித்தோழனுக்கு தோள் கொடுத்திருக்கிறேன். அவ்வளவுதான்! அந்த உணர்வுக்கு காரணம் எனக்கு தாய்ப்பாலைப் போல தமிழ்ப்பால் ஊட்டிய என் தமிழ்ப் பேராசான் முத்தமிழ் அறிஞர் முதல்வர் டாக்டர். கலைஞர் அவர்கள் தான்.

ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமை போராட்டங்களை அனுபவ பூர்வமாய் எடுத்தியம்பும் இவன் கவிஞன் மட்டுமல்ல சமூக அறிவியல் விஞ்ஞானி.

புறபட்டு விட்டது ஒரு புதிய தமிழ்க் கவிப் போர்வாள். முயற்சிக்கு என் வாழ்த்துக்கள்.

இடம்: சென்னை

திரைப்பட இயக்குனர்
**கவிஞர் பாரதி மோகன்**

படிப்பகம்

www.padippakam.com

# என் கை ரேகை பற்றிய சில நினைவுகள்

மீண்டுமொரு புதுக்கவிதைத் தொகுதியோடு

உங்களைச் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி.

என் டயரியில் எழுதப்படாத பக்கங்களைப் போல என் வாழ்வும் வெறுமையாக.. வருடம் மட்டும் முடிந்து போகின்றது.

அப்படி தொலைந்து போன இருபது வருடங்களில், நான் சேகரித்து வைத்த சொத்து இந்த கவிதைகள் தான்.!

அன்னிய பெரு வெளியின் வெறுமையில்,

அகதிப் பயண போர்வையில்

என் அனுபவ விம்பங்களாய்...

நானாக.. நீங்களும், நீங்களாக.. நானுமாய்

வாழ்ந்ததைத்தான் தான்

இந்த கவிதைத் தொகுதில் பதித்திருக்கின்றேன்.

உயர உயரப்பறந்தாலும் மனிதன் பறவையாக முடியாது.

www.padippakam.com



பறவைகளுக்கு இருக்கின்ற சுதந்திரத்தில் பாதி கூட, இங்கு மனிதனுக்கில்லை.

பறவைகள் தாம் நினைத்தவுடன் சுதந்திரமாக வானில் எழுந்து பறந்துவிடுகின்றன நாடுகள், எல்லைகள், விசாப்பிரச்சனைகள்

எதுவுமே அவைக்கு கிடையாது.

ஆனால் மனிதன் அப்படியல்ல,

எல்லாவற்றுக்கும் கட்டுப்பாடுகள் இருக்கின்றன.

பலசாலியால் பலமில்லாதவன், பணசாதியால் பணமில்லாதவன், பெரும்பான்மையால் சிறுபான்மைகள் என அதிகார வர்க்கத்தால் அடிமைப்படுத்தப்படுகின்றான்.

அடிமைத்தனத்திலிருந்து மீள நினைத்தவர்களை மீறும் குற்றச்சாட்டுகளை காரணம் காட்டி அதிகார வர்க்கங்களினால் இவர்கள் சிறையில் தள்ளி சித்திரவதைக்குள்ளாகின்றனர்.

இந்த சித்திரவதைகளிலிருந்து தப்புவதற்காக

கடவுச் சீட்டுக்களில்லாமலும் அந்தந்த நாடுகளுக்குரிய விசாக்கள் இல்லாமலும் ஒரு நாட்டுக்குள் நுழைகின்றபோது அந்த நாட்டில் அகதி அந்தஸ்து கொடுக்கின்ற நாடாக இருந்தால் அந்த நாட்டின் சட்டத்துக்கமைய அகதிஎன்றபெயரில் ஏற்றுக்கொள்ளப்ப டுகின்றான்.

அப்படி அகதியாக 20 வருடங்களுக்கு முன் டென்மார்க்கில் அகதியானவன்தான் நான். ஏதோ என் மன உணர்வு எழுதத் தூண்டுகிறது எழுதுகின்றேன்.

சிலர் இதை கவிதை என்று பாராட்டுகிறார்கள்.

சிலர் இது கவிதையா..? என்று விமர்ச்சிக்கிறார்கள்.

இரண்டையும் ஏற்றுக்கொள்ள ஒரு படைப்பாளி தயாராகிக்கொள்ள வேண்டும். ''கவிதை என்பது உணர்ச்சிகளின் பிரவாகம'' என்கிறார் கவியரசு கண்ணதாசன்.

எப்போதெல்லாம் எனக்கு தனிமை கிடைக்கின்றதோ, எப்போதெல்லாம் என் சுமையின் பாரம் என் மனத்தை

www.padippakam.com



அழுத்துகின்றதோ எப்போதெல்லாம் என் உணர்வுகளை கட்டுப்படுத்த முடியாதிருக்கின்றதோ அப்போதெல்லாம் என் மனம் ஏதாவது எழுதச்சொல்கின்றது, எழுதுகிறேன்.

(சு)தந்திர வானில் பறக்க விம்பி எழுந்து பறக்க முயற்சித்து, தோத்துப்போய் மீண்டும், மீண்டும் அகதிக்கூட்டின் மீது தான் விழுகின்றேன்.

அப்போது தனிமையின் தவிப்பில், அதனால் எழுந்த ஏக்கத்தில், அவ்வப்போது புனையப்பட்டவைகள் ஐரோப்பிய தமிழ் வானொலிகள் பலவற்றில் ஒலித்தவைகளும், இணையத்தளங்கள், சஞ்சிகைகளில் இடம்பெற்றவைகளும், கவியரங்கங்களிலே பாடப்பட்வைகளுள் தேர்ந்தெடுக்கப் பட்டவை.. ''ஒரு அகதியின் கைரேகை'' என்ற தலைப்புக்குள்ளேயே தொகுக்கப்பட்டுள்ளன.

பல உண்மைகள் இங்கு பதிவு
படப்படவில்லை என்பது உண்மை -
ஆனால் பதிவு பட்டது அத்தனையும்
உண்மை !

நான் இந்தியா சென்றிருந்த போது எதிர்பாராதவிதமாக ஒரு பிரபலத்தை சந்தித்தேன். அவர் தான் இயக்குனர் பாரதிமோகன்.

பல திரைப்படங்களில் ராமநாராயணன், தங்கர்பச்சான், விக்ரமன், ராஜகுமாரன் போன்ற இயக்குனர்களுக்கு உதவி இயக்குனரும். 'ரெயிலுக்கு நேரமாச்சு', 'ஒரு தொட்டில் சபதம்', 'சின்னக்காளை' போன்ற படங்களின் இயக்குனரும் இவரே ......

ஒரு இசையமைப்பாளர், கவிஞரும் கூட என்னுடைய பத்து பாடல்கள் அடங்கிய 'கவியோசை' என்ற இசைத்தட்டுக்கு பிர-பல பாடகர்களை பாட வைத்து இசைவடிவம் கொடுத்தவரும இவரே ..

இலக்கியத்தின் பால் அதிக நாட்டம், இலங்கைத்தமிழரின் பால் அன்பு கொண்ட இவர் குறுகியகாலத்தில் நண்பராகியிருந்தாலும் என்னுடைய இந்த கவிதை நூலுக்கு முகவுரை எனும் ஆசிவழங்கி வாழ்த்தியது எனக்கு கிடைத்த பெரும்பேறாகக் கருதுகிறேன்.

படிப்பகம்

www.padippakam.com



தீபம் தொலைக்காட்சி நிகழ்ச்சி தயாரிப்பாளர்களின் ஒருவர் சாம் பிரதீபன்.

கவிஞர் பல தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கு மத்தியிலும் நேரமில்லாத சூழலிலும் இந்த கவிதைத் தொகுதிக்கு முன்னுரை வழங்கியிருப்பது என் கவிதை நூலுக்கு மணி மகுடமாய் இருக்கிறது.

டென்மார்க்கில் குறிப்பிட்ட இலக்கிய நண்பர்களுள் ஒருவர். புலம்பெயர் அவசர வாழ்விலும் இலக்கியமென்றால் அனைத்தையும் மறந்து...

ஆறுதலாக நின்று பேசக்கூடியவர். வி.ஜீவகுமாரன் அவர்கள். இப்படியும் நாடகம் செய்யலாமோவென இவரின் நெறியாள்கையில் பல நாடகங்களை நான் என்னை மறந்து இரசித்ததுண்டு.. தற்போது ஒரு நாவல் ஒன்றை எழுதிக் கொண்டிருக்கின்ற அவசரத்திலும் நான் கேட்டவுடன்அணிந்துரையை வழங்கியிருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

ஆ.ஞே. அனஸ். எனக்கு பிடித்த குரல்களில் ஒன்று. இயல்பாய் தோழமையோடு பழகும் இவரது குணம் எனக்கு மிகவும் பிடிக்கும். தீபம் தொலைக்காட்சி நிகழ்ச்சி தொகுப்பாளர் இவர். இளைய அப்துல்லாஹ் என்ற புனைபெயரில் எழுதிக் கொண்டிருக்கின்ற ஒரு கவிஞர், எழுத்தாளரென பல பரிமாணவளர்ச்சி கொண்டவர். இவரது கவிதைத்தொகுதியான 'பிணம் செய்யும் தேசம' எனும் கவிதைத் தொகுதியின் தாக்கம் இன்னும் என் மனதை விட்டகலவில்லை என் கவிதைத்தொகுதிக்கு வாழ்த்துரை வழங்கியிருப்பதையிட்டு நன்றி உரைக்கிறேன்.

இந்நூலுக்கு ஓவியர்களாக செயற்பட்ட செல்வமாறன். வினோத் காமராஜின் கை வண்ணங்கள் இந்நூலுக்கு மெருகூட்டியுள்ளன.

கவிதை என் தொழிலல்ல, பொழுதுபோக்கு!

தொழிலை விட பொழுது போக்குக்குத்தான் நான் அதிக நேரம் செலவிடுவதாக என் ராஜினி என் மீது குற்றம் சுமத்துவார். பொழுது போக்காக நான் எழுதியது உங்கள் பொழுதையும் பயனுள்ளதாக போக்குமென்றால் எனக்கு மகிழ்ச்சியே!

www.padippakam.com



''பிரசவவலி நம் இருவருக்குமே புதிதல்ல ஏனெனில் கவிதையும் ஒரு பிரசவம்தான். கவிதையால் தான் எனக்கும் ராஜினிக்கும் இடையில் அதிக மனக் கசப்பு. தன்னைவிட அதிக நேரம் நான் கவிதையுடன் வாழ்கிறேனாம் ஆனாலும், நான் பெற்றெடுக்கும் கவிக்குழந்தையை தத்தெடுத்து என் இலக்கிய பசிக்கு வழிவிட்டு உறுதுணையாக இருக்கும் என் வாழ்க்கைத்துணைவி ராஜினி சக்திதாசனுக்கும்,

என்னோடு விளையாட எதிர்பார்த்து ஏமாந்து கொண்டிருக்கும் கஸ்தூரி, மிதுசன், வைஷ்ணவி அவர்களுக்கும் இந்த கவிதை நூல் உருவாக்கத்துக்கு தமிழகத்தில் நின்றுழைத்த அன்பு நண்பர் கமலநாதன். எழுத்துப்படிகள் திருத்திச்சீர் செய்து இந்நூல் சிறப்பாக வெளிவர உதவி செய்த முத்தமிழ் அறிஞர் தமிழக முதல்வர் டாக்டர். கலைஞரின் கலைஞர் தொலைக்காட்சி தமிழருவி கவிதை முழக்கம் இலக்கிய உதவியாளர் இயக்குனர் பாரதி மோகன் அவர்கட்கும் சிறந்த முறையில் இதை அச்சிடும் வெளீயிட்டகத்துக்கும் இதை வாசிக்க போகின்ற வாசகர்களாகிய

உங்களுக்கும் என் நன்றி.!

என்றும் அன்புடன் ....
**இணுவை. சக்திதாசன்**

*Kiledvangsparken - 36*
*4390 vipperød, Denmark.*
*தொலைபேசி: 0045 - 47761019*
*கைத்தொலைபேசி: 0045 - 26706931*
*மின்னஞ்சல் : sakthy - @hotmail.com*

www.padippakam.com




## கண்ணீர்க் காயம்!

மிடுக்குடன்
தமிழன் கொடிகட்டி
வாழ்ந்த இனம்.
கொடுமரக்கர் கரங்களில்
உரிமை மறுக்கப்பட்டு
உணர்வு நெரிக்கப்பட்டு
காலக் கொடுக்கினில்
உண்மைகள்
மண் தோண்டி
புதைக்கப்பட்டு
மேற்குலக நாடொன்றில்

தூக்கியெறியப்பட்ட
ஓர் இலங்கைத் தமிழ்
அகதியின்..
கவலை தோய்ந்த
கண்ணீர்க் காயம்!

www.padippakam.com





# சுதந்திரம்

ஈர மனம் வேண்டும்
இரக்க சிந்தை வேண்டும்
தூரமதிகமிருந்தாலும்
ஊருமினமும் - என்றும்
நினைவிலிருக்க வேண்டும்
ஆலம் விழுதைப் போல
உணர்வு...
வேரை நாட வேண்டும்!

நான் பிறந்ததோ
பதுங்கு குழியில்
வளர்ந்தது அகதிமுகாமில்!

படிப்பகம்

www.padippakam.com



சிந்திக்கத் தொடங்கியது
சிறைக் கூடத்தில்

(சு)தந்திரம்
சுதந்திரமென்று
கத்திக் கத்தி
அது கிடைக்காமலேயே...

என்னுயிர்
போவதுறுதியென்றான பின்

(சு)தந்திர வானிலாவது
பறப்போமென..
மேலெழுந்தபோது..
கொத்திக் கிழிக்க
இங்கும் கழுகு கூட்டம்
அப்படியானால்...
எங்கே எங்கே
எமது (சு)தந்திரம்?

படிப்பகம்

www.padippakam.com





## ஒரு அகதித் தமிழனின் கண்ணீர் கடிதம்...!

தொப்புள் கொடியுறவே!
முத்துக்குமரா.!
உப்புக் கடல் நடுவே
உனை பிரித்த...
இரத்த உறவுக்காய்
தீயில் எழுதினாய்
உயிர்மை கொண்டு
ஒரு கடிதம்!
முகவரியில்லாக்
கடிதம் தான் அது
ஆனாலும்,
முழுசாய்ப் படித்தேன்

www.padippakam.com



நானதை!
நெஞ்சம் வலிக்குதய்யா!

மரணப்
படுக்கையில் நீ
அகதிப்
படுக்கையில் நான்
மரணம் துரத்த, துரத்த
தாய் மண்ணில்
மக்கள் படும் அவலம்
கண்டுதான் நீ
கையில் எடுத்தாய் தீ
தலை வணங்குகிறேன்!

கூப்பிட்ட
குரலுக்கு செவிமடுக்க
யாருமில்லைத்தான்
ஆனாலும்
எதிரி நம்மையழித்தது
போதாதென்று
நம்மை நாமேயே...
அழித்துக் கொள்ள வேண்டுமா?
வேண்டாம் நண்பா வேண்டாம்!

உன்னோடு
முடியட்டும் தீக்குளிப்பு!
நீ பற்றவைத்த தீ!
உலகத் தமிழ் மக்களின்
நெஞ்சங்களில் பற்றி எறியட்டும்!

நம் பலத்தைப் பெருக்கிப்
பகையை வெல்ல

படிப்பகம்

www.padippakam.com



உன்னைப் போன்ற உணர்வாளிகள்
உயிரோடு வேண்டும்!
ஒருமித்த குரலில்
ஓங்கித் தட்டுவோம்
உலக மனச்சாட்சியின் கதவை
நிச்சயம் ஒரு நாள் அது திறந்தே தீரும்


●

**தீபம் தொலைக்காட்சி, TRT தமிழலை வானொலி, Abc வானொலி பாரிஸ், Ibc தமிழ் லண்டன், ஆகியவற்றில் இடம்பெற்ற கவிதை.**

படிப்பகம்

www.padippakam.com





## கறுப்பு யூலை!

எம்மினத்தின்
குரல் வளையை
நெரித்த நாள்
மட்டுமல்ல,
குடலையுருவி சிங்களம்
மாலையாக(ப்) போட்டநாள்

மறக்குமா நெஞ்சம்
பாவியரின் இழிசெயலை
மன்னிக்கத்தான் முடியுமா?
சிங்களக்
காடையரின் கோரத்தனம்
உலகிற் கெடுத்தியம்பிய நாள்.
எழுப்புவாய் குரல்
பரவட்டும் சிங்கள அரசின்
கொடுங்கோலாட்சி! பற்றிய செய்தி

படிப்பகம்

www.padippakam.com



மனிதத்தை
மதிக்கத் தெரியாத
மானிடமே..
கலக்த்தையுருவாக்கி
தமிழினத்தை
கூண்டோடு அழிக்கும்
திட்டம்.

காடையருக்கு
மந்திரமோதி
கட்டவிழ்த்து விடப்பட்ட
அராஜகம்.
ஆட்சியாளரே
பூச்சாண்டி காட்டி
ஏறிக்கொண்டிருக்கிறனர்
அரியாசனம்!
புதவியேறிப்
புவியாண்ட தமிழன் - இன்று
ஏழு கடல் தாண்டியகதியானான்!

சிரித்துப் பழகிய
சிங்களம்
சீறிப்பாய்ந்து - தமிழனை
கொத்தி கிழித்து
உயிர் குடித்த நாள்!

புனிதப் போதனைகள் தந்த
புத்த பகவானின்
கருணைப் பக்தர்களா?
இத்தனை
படுபாதகச் செயல் புரிந்தார்கள்
என எண்ணத்
தோன்றுகின்றதா?.

www.padippakam.com



கட்டிய துணியோடு
தமிழனை
அகதியாக்கியது
83 யூலாய்!
கண்ட, கண்ட விடத்தில்
தமிழனை
வெட்டியும் போட்டனர்
பிண்டங்களாய்.

சுட்டது நெருப்பு
சுடச் சுட
ஏனோ...
எரிந்தது
தமிழீழப் பரப்பு!

எத்தனை இரத்தம்
எத்தனை உயிர்கள்
எத்தனை உடமைகள்
அத்தனைக்கும் பதிலென்ன?

பட்டது போதும்
பட்ட மரமாய்
வாழ்ந்தது போதும்
வெட்ட வெட்ட
தழைக்குமாம்
வாழை
செத்த உடலையும்
வெட்டினான்
ஒரு கோழை.!

தமிழர் நெஞ்சத்தில்
கறுப்பு யூலாய்

படிப்பகம்

www.padippakam.com



வடு மாறாத பக்கங்கள் !

சிங்களத் தனிச்சட்டமிட்டு
தமிழன்
முதுகில் ''ஸ்ரீ''
பொறித்த நாளை
எண்ணியெண்ணி - நெஞ்சு
பொருமி வெடிக்குதடா

சிங்கள ''ஸ்ரீ'' குத்தி
அடிமைகளாய் - உன்
வண்டியிழுக்க
நாங்கள் என்ன
அடி(மாடுகளா) மைகளா?

தாங்க முடியாத வலி
உள் நெஞ்சில்
கொழுந்து விட்டெரியுது
நெருப்பாய்!

அந்த நெருப்புதான்..
இன்று தமிழகத்தில்
முத்துக்குமார், ரவி —
சுவிஸ் ஜெனிவாவில்
முருகதாசன்..
போன்றோரின் தீச்சுவாலைகள்!
இனியாவது
உலக மனச்சாட்சிகளின்
கண் திறக்குமா?
ஈழத் தமிழருக்கு
விடிவு கிடைக்குமா?

படிப்பகம்

www.padippakam.com



# இப்போதுதான் நான் அகதியென்று!

வானைப் பிடிப்பதைப் போல
அந்த விமானம்.
முகிலைக் குடைந்து
பறந்தது...
என் மனம் மட்டும்
(வெளிநாடு)
வந்து விட்ட நினைப்பில்
பெரு மூச்சு விட்டபடி
ஆழ்ந்தது
ஆனந்தக் களிப்பினில்!
காற்றைக் குடைந்து
விண்ணேறிப் பறந்த விமானம்
தோற்றுப்போய்
மீண்டும்
தரை தொட்டது!

படிப்பகம்

www.padippakam.com



அழகிய நாடாய்
ஆனந்த புரியாய்
சொர்க்கம்
போலிருக்கிறதே..
மரங்கள் கூட தலைசீவி
இத்தனை அழகாயிருக்கிறதே..
இது தான் வெளிநாடோ!

''என''
சிந்திக்க முன்னம்
'சிங்கப்பூர்' என
அழகாய் சிரித்தது
அந்த விமானநிலையம்!

யாரிடம் கேட்பது
எப்படி கேட்பது
எல்லாமே புதுசாய் இருந்தது
புதிராயும் தான்!

என்னோடு வந்த அனைவரையும்
ஒன்றாய் ஏத்தியபடி
சிங்கப்பூரை யூடறுத்து
பறந்தது ஒரு ''டாக்சி''

பரபரப்பில்லாத
நீண்ட மௌன விரித்தலுள்
பயம் மெழுகிய விழிகள்..
ஆளையாள் பார்க்க

ஏன் இப்படி...
எல்லோரும்.?
எல்லோரிடமும் ''பாஸ்போர்ட்''

www.padippakam.com



இருக்கிறது தானே!
நாமும், பல இலட்சம்
கொடுத்து தானே
பறந்து வருகிறோம்.
இருந்துமேன்
இந்த பயக்கெடுதி!

எனக்குள்
எழுந்த இந்த கேள்விக்கு.
விடை காணா வினாவோடு
தொடரும் என்
மனப்போராட்டத்துக்கு
விடையாக..

என் முதுகைத் தட்டி
இனியுன் பெயர்

'அப்துல்லா' என்றான் ஏஜென்ஸிக்காரன்!
கை மாறியது ''பாஸ்போர்ட்''!
இப்போது தான்
புரிந்தது
நான் அகதியென்று!

படிப்பகம்

www.padippakam.com



# இல்லத்துணை

அகதியாகி வெளிநாடு வந்துவிட்ட ஒருவரின்
துணைவியார் அருகில் இல்லை அவள்
உள்நாட்டிலேயே அகிதியாகிருக்கிறாள்
இளமைத்தவிப்பு குளிரின் விறைப்பு
இவற்றுக்கிடையில் வாட்டும் தனிமை.
இவரது நிலைமையில் இருந்து எழுதிய
கவிதை

கொஞ்சும் பனிக்கூதல்
கலைத்து,
பஞ்சணைக்குள் முகம்
புதைத்தும்
அவன் மனமோ..
தேடுவது இன்னும் - தன்
மஞ்சத்து ராணியைத்தான்!

படிப்பகம்

www.padippakam.com



கசங்காத..
பஞ்சணைமுன்னே
கசங்கியது
இதயம் இரண்டு தான்!
பிசகாத பொருத்தங்களிருந்தும்
பிசகியது
வாழ்வின் நெருக்கம் தான்!


உறங்கா விழிகள் முன்னே
உறங்கியது - அவர்கள்
வாழ்வின் கோலம்தான்!
இரங்காத இரவின் முன்னே
கிறங்கியது அவர்கள்
மூச்சுக் காற்றும்தான்!

பகலும் இரவும் மாறினாலும்
பயணமொன்றுதான் - பிரிந்த அகவாழ்க்கைக்கு
முடிவு வருமா? - இல்லை
உயிர் தான் முடியுமா?

படிப்பகம்

www.padippakam.com





## மரண ஓலம்!

இலங்கைத் தீவில்
அநியாயம் முளைத்து
ஆண்டு
பலவாய்ப் போனது
தமிழனுயிர்
ஒவ்வொன்றும்
செல்லாய்க் காசாய் ஆனது!

சொல்லாத் துன்பம்
சோக இரவு
புதுசு புதுசாய்
மரணவோலம்
அங்கும் இங்கும்
எங்கும்
தமிழன் அகதி!
தமிழன் அகத்தில் தீ!

படிப்பகம்

www.padippakam.com



ஆற்று வெளியில்
ஊர்த் தெருவில்
இல்லை
இப்போ...
வன்னியெங்கும்
வீட்டுக் குள்ளேயே - மனித
சடலம்
மிதக்குமவலம்!

உறவின் சடங்களைக் கடந்து,
கடந்து,
ஊரை விட்டே ஓடுமவலம்

ஈமைக் கிரியைக் கூட
செய்தலின்றி
அகதியாகி
ஓடும் நிலைதான்
தமிழனுக்கு!

ஆதித்தமிழாம்
தேன் மதுரத் தமிழ்
அழகு அரிதாரம்
பூசிய பைந்தமிழ்
சேடமிழுக்குது
ஆதிக் குடியாம்
தமிழ்க்குடி
காலம் காலமாய்
வாழ்ந்த குடி
சேடமிழுக்குது
தமிழீழத்திலே!

படிப்பகம்

www.padippakam.com




தமிழனின்
மரணவோலம்
கேட்கும் கேட்காமலிருக்கும்
உலக மனச்சாட்சிகளே
கேட்கும் காலம் வரும்
வந்தே தீரும்!

உங்களுக்கும்!
அப்போ... அதைக்
கேட்க அங்கே தமிழன்
இருப்பானா..?

படிப்பகம்

www.padippakam.com





# அகதி முகாம்

உயிருக்கு மட்டும் தான்
உத்தரவாதம் - இங்கு
உணர்வுக்கில்லை

பொய்மைக்கு மட்டும் தான்
முன்னுரிமை - இங்கு
உண்மையின் விசும்பல்கள்
சோகத்துடன்தான் இன்னும்!

பணத்துக்குள்
மாறிய முகங்கள்
பகைமையைத்தான்
விதைத்திட்ட அகங்கள்
தமிழுக்குள்
எத்தனை சுகங்கள்
அறியாத

www.padippakam.com



வரைக்கும் தான்
சுமைகள்!

அகதி
வாழ்க்கையிது என
உணர்த்தி
வளர்த்திடு - உன்
பிள்ளைதனை!

அவர்களுணர்ந்திடாத வரைக்கும்
உண்மை யறிந்திடாத
மாயைக்குள்
மயங்கிக்கிடக்கின்றார்களா?
ஏன்பதை
நீ முதலில் உணர்ந்திடு!

எதுவுமே தெரிந்திடாத போது
தேனாய் இனித்த
வாழ்க்கை.
எல்லாமே தெரியுமென்றபோது
ஏனோ கசக்குது

சுமைக்குள்ளும்
தென்றலை தேடு
வியர்வையாவது
காயட்டும்!

படிப்பகம்

www.padippakam.com





# நம்பி(க்)கை!

ஆயிரம் பொய்
வார்த்தைகளில் - காதல்
வாழ்வதை விட
ஒரு மெய்யிலாவது
சாவது மேல்!

பொய்களில் - காதல்
கருத்தரிப்பதை விட
மெய்யினில்
கரு சிதைவது மேல்!

தோகை மயில்
அழகு தீர்ந்தால்-நம்!
விழிகளுக்கு தான் சோகம்

மூங்கில் காடே
விக்கித்துக் கொண்டால் - நம்

படிப்பகம்

www.padippakam.com



செவிகளுக்குத்தான் சோகம்!
அழகுத் தமிழ் பூங்கவிதை
பேசமறந்தால் - நம்
உணர்வுக்குத்தான் சோகம்!

நம்பிக்கை அதை
தளராவிட்டால் - நம்
வாழ்க்கையே சோகம்!

ஆயிரம் தோல்விகளை விடு!
அடுத்து வரும்
வெற்றியை
உன் கவனத்தில் எடு!

முயற்சி அதை
கைவிடாதே வாழும் -
வரை போராடு
வெற்றி நிச்சயம்!

படிப்பகம்

www.padippakam.com





# ம(ர)ணம் மட்டும் மௌனமானது!

வசந்த கால
கோடை வாசலுக்கு
வந்து தென்றலுடன்
வணக்கமென்றது!

குருத்து வந்த
ஆப்பிள் மரம் கண் திறந்து
வணக்கமென்றது!

குஞ்சு குருமன்
குருவியெல்லாம்
வாய் திறந்து
வணக்கமென்றது!

www.padippakam.com



அயல் வீட்டு ஜன்னல் கூட
திறந்து நின்று
வணக்கமென்றது!

நாட்டுக்கு வெளியே போன
அன்றில்களெல்லாம்
மீண்டு வந்து
வணக்கமென்றது!

டேனிஷ் மக்களெல்லாம்
உற்சாகத்தோடு - சம்மர் ஆடைகளை
அணிந்தபடி
வணக்கமென்றனர்!

மனம் மட்டும் - தன்
விடியல் தேசம் பார்த்து
மௌனமானது!

படிப்பகம்

www.padippakam.com



## அகதியிருப்பு!

இறப்புக்கும் பிறப்புக்கும்
இடையினில் தான்
உயிர் பூ வின்
இருப்பு!
அது உணர்வோடு
இருந்தால் தான்
மனிதயிருப்பு!

உயிர்ப்பின்
இருப்புத் தேடியொரு
கூட்டம்
உணர்வின்
இருப்புத் தேடியொரு
கூட்டம்

உயிர்ப்பின்
இருப்புத் தேடி பறந்த

படிப்பகம்

www.padippakam.com



கூட்டம் - தம்
இருப்பைத் தக்க வைத்தபடி
உணர்வுப் பூக்களுக்காய்
உயர் வானிலிருந்தபடி
கண்ணீர் வடிக்கின்றன

அமைதியென்றறிந்து
முகிலோடு விழுந்து - நிலத்தில்
புரண்டெழும்பி
மீண்டும்

விண்ணில் நின்றபடி
கண்ணீக் கோலம்!

காகிதப் பூக்களெல்லாம்
கண்ணீர் வடிப்பதினால் தான்
என்னமோ
இரத்தச் சுவடுபட்ட
கடுதாசி இன்னமும்
ஈரமாயிருக்கிறது!

''பியூன்'' இல்லாமலேயே..
காகிதப் பரிமாற்றம் - அகதியின்
முகவரியில்லாமலேயே
இருப்பும் இருக்கிறது!

இல்லாத இருப்புக்காய்
ஏங்கியேங்கியிறப்போமா?
இல்லை இருக்கின்ற இருப்பையாவது
தக்க வைத்துக் கொள்வோமா?

முடிவில்லாப் பயணம்
தொடரும்...
வாழ்க்கை தானாய்
முடியும்!

www.padippakam.com



## எமமை
## விற்று, நாமே
## நடிக்கிறோம்...!

கற்பனையில்
கானாத துன்பம்
கால் நீட்டி படுக்காத வாழ்வு.
பறவை கூட
இனிமை தேடி
நம்ம நாட்டுக்கோடுது
உறவையிழந்து
உயிரைக் கொண்டு
நாமோ..
இங்கு குளிர்-நாட்டுக்குள்.

மல்லிகையின்
வாசம் இங்கிருக்கிறதா?

www.padippakam.com



காற்றின் கீதம் இருக்கிறதா?
நேற்றிருந்த வாழ்வின்
சரி பாதியாவது இங்கிருக்கிறதா?

இருந்தும் நாம்
இருக்கிறோம்
இயன்றவரை சிரிக்கிறோம்
எம்மை விற்று நாமே
நடிக்கிறோம்.

உடம்பின்
சக்தி இருக்கும் வரை
உழைப்பின் சக்தியிருக்கும்
உயிரின்
சக்தி இருக்கும் வரைக்கும்
உணர்வின் சக்தியிருக்கும்

உழைப்பின்
தேக்கம் பணங்களாக
உணர்வின்
தேக்கம் பிணக்குகளாக
உயிரின்
தேக்கம் தடங்களாக
பழுத்த பழங்களோ..
வயோதிக பழங்களாக
அகதி வாழ்வே..
ஒரு தொடர்கதையாக
எம்மை விற்று நாமே...?
நடிக்கிறோம்!

படிப்பகம்

www.padippakam.com





# புதைக்குழியினருகில் ஒரு பேனா!

ஊடகவியலாளர்கள் பலர் இலங்கையில் கொல்லப்பட்ட போது அதன் நினைவாக எழுதப்பட்ட கவிதை இது!

●

பேசுமிதயமுடன் வீசிய
தென்றலும் பேசாமலிருந்தது
உணர்வறுந்த
பேனா முனைமட்டும்
மனதுக்குள்
அழுதது.

யாரோடும் பேச
பேசத்தெரியாதவரோடு
என்னத்தை பேச?

www.padippakam.com



உணர்வில்லா
எனக்குள்
உயிர் தந்தவனே..
நீ எங்கே?

உனக்கு கூட
சுதந்திரமில்லையென்றால்
சுடுகாட்டில்
இங்கெனக்கென்ன
வேலை!

தோண்டிய
புதைக்குழியில்..
என்னை மட்டும்
விலக்கி வைத்து விட்டு
நீ மட்டும்
புதைந்து போனதேனோ?

உன்னுடைய
ஒவ்வொரு செய்கைக்கும்
ஒவ்வொரு
காரணமிருக்கும்
என்னை மட்டும்
விட்டு விட்டு போனது
என்னவாக இருக்கும்..?

இந்த உலகிற்கு - நீ
சொல்ல நினைத்த
சேதிகள் பலவுண்டு அதைச்
சொல்லு முன்னம்
புதையுண்டு போனாய்...

படிப்பகம்

www.padippakam.com



என்னைத் தவிர - வேறு
யாருக்குமே
தெரியாத - அந்த
உண்மைகளை
என்னுதிரம் இருக்கும்
வரைக்கும்
அத்தனையும்
வெளிக்கொண்டு வந்து
விட்டுத்தான்
என்னுயிர் - இந்த
உடலை விட்டுப்பிரியும்!

படிப்பகம்

www.padippakam.com





## தீபாவளி!

சூரத்தனத்தின்
சுவடு தொலைந்த நாள்
அநியாயத்தின் - சிரசு
கொய்த நாள்!

இருள்
தொலைந்து
தெய்வீக ஒளியில்
நிலவு சொரிந்த நாள்
கொடியவரை ஒழித்த
வெற்றித் திருநாள்
தீபாவளிப் பெருநாள்.

உழைப்பாளி
வீட்டில் இன்று
உணர்ச்சித் திருவிழா

படிப்பகம்

www.padippakam.com



ஏழையின்
பீத்தல் சட்டைக்கு இன்று
விடுமுறைத்திருவிழா!

கூவமும் ஓடுது பார்
தேனாறாகி
குருவியும் போடுது பார்
புதுச் சட்டை வாங்கி

புராணக் கதை
பல சொன்ன பண்டிகைத் திருநாள்
இனியாவது தமிழர் பண்பாட்டை
போற்றி தலை விதியை
மாற்றி...
இந்த தீபாவளியிலாவது
புது வழி பிறக்குமா?

கடந்த தீபாவளிகளில்
மத்தாப்புகளும் பட்டாசுகளும்
எங்கள் மனிதர்களையம்
சேர்த்து எரித்து வெடித்தன!

ஒவ்வொரு தீபாவளியிலும்
தன் மான
தீப மெரியுது
தமிழனுயிர்தான்
கருகுது
இதில் பண்டிகை
எங்கே கொண்டாட!

வீடு...
வாசல்களையிழந்து

படிப்பகம்

www.padippakam.com




வீதியில் நின்றபடி
நிற்கதியாய்
நிற்குமவலம்!

இது
தொடர் கதையாய்
தொடருமா..?
இல்லை
விடுகதையாகிவிடுமா?
முடிவுரை
ஒன்றைத் தா!
நரகாசூரனை
அழித்த கிருஷ்ணா!.

படிப்பகம்

www.padippakam.com





# வீதியில் நின்றாவது நீதி கேட்போம்!

வாழ்வு சிறியது அதன்
அர்த்தம் பெரியது
மகத்துவப் படுத்திக் கொள் மனிதா!
உன்னை மறக்காது இந்த உலகு

ஆழி - சூழ் தீவிலே
அவலங்களில்
சேவல் கூவும்
பொழுதில் கூட
விடியவில்லையங்கு
கூவிய..
சேவல்தான்
எதிரி வீட்டு
குழம்பில் கொதிக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



அழிவென்ன
அடுத்தடுத்து - தமிழன்
உடுத்திக் கொள்ளும்
சொத்தா?
விடிவு மட்டுமென்ன - தமிழன்
கைக்கு எட்டாத
பூமிப்பந்தின் தட்டா?

தடைதகர்த்தி
சிரிக்கிறது விடியல் பூ!
உடை மாற்றி
வெளியே வா?
உன்னால் முடியும் தமிழா!

காலம் கடத்தி
துயரம் போர்த்தி
சந்ததி பல தொலைத்தோம்.

சோகம் பரப்பும் வாழ்வை
வாழ்ந்தும் தொலைத்தோம்.
முடிவு ஒன்று
முடிந்தாகி விட்டது
முகவரியும்
தொலைந்தாகி விட்டது
தொலைந்த இடமும்
தெரிந்தாகிவிட்டது - இனி
வீதியில் நின்றாவது
நீதி கேட்போம்! தட்டுவோம்!
நிச்சயம் திறக்கும்
உலக மனச்சாட்சிகளின் கதவு!

படிப்பகம்

www.padippakam.com



# தமிழனாய் பிறந்தது தவறா...?

சுத்தும் புவியெங்கும்
கவியெட்டும்
சுகந்தரும்
தமிழ்! அதில்
முட்டும் கவி மனங்கள்
வென்று பகை வெட்டும்!

கத்தும் கடல் எங்கும்
தமிழன் மூச்சு!
பொங்கி வந்த அலை
அம்மாவென்று மொழிபேசி
தரை தட்டும்!

கை கொடுக்க யாருமில்லை - திசையெங்கும்!
என்ன பாவம் செய்தோம்

படிப்பகம்

www.padippakam.com



தமிழனாய்
பிறந்ததைத் தவிர?

இருளுக்குள்
கிடந்த மக்களைக் காக்க - அன்று
ஆண்டவர் இயேசு
புத்தொளி பாச்சி புதுமதம் கண்டார்!
மீண்டும் இருள் ஏனின்று?
யேசுவே! ஆட்சியாளர்கள்
உம்மை சிலுவையில் அறைய
நீங்கள்
''பரமபிதாவே என்னை ஏன் கைவிட்டீர்'' எனக் கேட்டீர்
இன்று நாங்கள் உம்மை கேட்கிறோம்
''யேசுவே எமை மட்டும் ஏன் கைவிட்டீர்!
நாங்கள் தமிழனாய் பிறந்ததாலா''?

அவலங்களும்
அக்கிரமங்களும்
மீண்டுமேனின்று.?

போய்விடு 2008 டே
தொலைந்து போய்விடு
இனி வரும் ஆண்டாவது
நிம்மதியை தரட்டும்
அமைதியையும்
சமாதானத்தையும் தரட்டும்
நீ தொலைந்து போய்விடு

நாடற்றவர்களாக
அனாதைகளாக

படிப்பகம்

www.padippakam.com



உருக்குலைந்து
சின்னாபின்னமாக
போதுமிந்தவலம்

வாழ நினைத்தது
தவறா?
சொல் இறைவா?
தமிழனாய் பிறந்தது
தவறா?

படிப்பகம்

www.padippakam.com



## வெறிச்சோடிப் போன வாழ்வுக்குள்...!

டென்மார்க்கில்...
நீட்டிநிமிர்ந்து படுத்திருந்த மாதவன்
திடுக்கிட்டான்
''அலாரம்''
தன்னையெழுப்ப மறந்து
தூங்கிக்கொண்டிருந்தது

பதை பதைத்து
மொட்டை மாடி மீதேறி
வானத்தை பார்த்தான்
நிலவின்றி
வானம் வெறிச்சோடிக்கிடந்தது

படிப்பகம்

www.padippakam.com



பல்லு பாதி தீட்டி
அவசரமாய்
பேருந்து நிலையத்துக்கே ஓடினான்.

யாருமேயில்லாமல்
வீதியும் வெறிச்சோடிக்கிடந்தது

மரச் செடி கொடிகளும்
இலையெல்லாம் கொட்டி
வெறிச்சோடிக்கிடந்தது

தூரத்தில் ஏதோ
வானத்தில் வருவது போல
கண் சிமிட்டி மறைந்தது ஒரு ஒளி

காற்றுக் கூட இல்லாமல்
கந்தக வானம்
நேற்றுக் கூட இப்படியில்லை
என்ன நடந்தது இன்று

அடடே..
நேரம் மாறி விட்டதோ
தனக்குள்ளெழுந்த கேள்விகளோடு
எடுத்தான் ஓட்டம்
மீண்டும் தன் வீட்டுக்கு

மனமும் வாழ்வும்
வெறிச்சோடி..
சோகம் புகுந்தேறிச்
சோர்ந்து விழுந்தான்!
பஞ்சணைக் கட்டில்
நெருஞ்சி முள்ளாய் குத்தியது.

படிப்பகம்

www.padippakam.com



## ஆட்டு மந்தைகளா?

அன்னிய
நாடெல்லாம்
உன்னை அரவணைத்தாலும்
அகிலத்திலுள்ள மொழியெல்லாம்
உன் நாவுரைத்தாலும்
புவனத்தில் - நீ
எங்கிருந்தாலும்
அவலத்தில்
உன் மன ஆழத்தில்
அடி நாதத்தில்
தாய் மடி கீதத்தில்
நீ கற்ற
முதல் வார்த்தை
“அம்மா'' என்ற
உயிர் வார்த்தைதான்
உன் நாவில் எழும்

படிப்பகம்

www.padippakam.com



அந்த உச்சரிப்பு
மட்டும் போதுமா?
நீ தமிழனென்று
பெருமைகொள்ள
பணம் மட்டும் போதுமா?
நீ தமிழனென்று
தலை நிமிர...


இருக்க
ஒரு இடமில்லை
கொள்ளி வைக்க
மயானமில்லை
ஆனாலும் கண்ட கண்ட இடத்தில்
பகைவர்கள் நம்மை
வெட்டித் தாக்க - நாம்
என்ன ஆட்டு மந்தைகளா?
மானிடமாய்
பிறந்து விட்டு
மந்தைகளாய் புதைவதா?

தெரியுது பார்
வாசலில் தெரு விளக்கு
நூற்பதற்கு யாருமில்லாமல்
எரியுது பார் நாள் முழுக்க
இருப்பதற்கு நாடில்லாமல்
தெரு விளக்காய் - தமிழன்
இன்று செத்துச் செத்துப் பிழைக்கும்
அவல வாழ்வு தொடர் கதையா?
இதற்கு முற்றுப்புள்ளி வைக்க
முனையப்போவது யார்?

படிப்பகம்

www.padippakam.com





# தைப்பொங்கல் பொங்குவோமா?

கதிரவன் வானில்
கட்டியம் கூற...
சுற்றமும் நட்பும்
சேர்ந்தேயிருந்து.
பொங்கி சிரித்திருந்தது ஒரு காலம்!

தை பிறந்தால்
வழி பிறக்குமென நம்பியிருந்தோம்!
இதோ முடிவு!
இதோ விடிவு! என
முப்பதாண்டுக்காலம்
போரியல் வாழ்வுக்குள் புகுந்து முடங்கிக்கிடந்தோம்!

வன்னிய வாழ்வுக்குள்
கூட்டுக்குடும்பமாய் 'கற்பகத்தருவாய்'.

படிப்பகம்

www.padippakam.com



கட்டிய வாழ்வை
உடைத்தெறிந்து
நாலா திசையிலும்
நாதியற்று
அனாதையாய் அன்னிய
நாட்டு வீதிகளில் நின்று
பதைபதைக்கும் நெஞ்சு
புரிகிறதா யாருக்கும்?
பொங்கல் வருகிறதென்று
மகிழ்விருக்கிறதா?

செத்து,செத்து மிதக்குது பார்
குளத்தில் மீன்களல்ல!
தமிழனுயிர் வன்னியெங்கும்!
கேட்பாரின்றி
சிதறிக்கிடந்த
பிணத்தைக்கண்டு
நாய்கள் கூட
மிரண்டு கண்ணீர் வடிக்குதாம்!

எம்மண்ணின் உறவுகள் ஓலம்
திரையிட்டு மறைக்க
ஐரோப்பாவில் பொங்கல் எப்படி
ஆசையாய் நடக்குமோ?
யாருக்குத்தான் படையல்?

ஏர் பிடிக்கவில்லையங்கு அந்த நிலமெங்கும்
போர் நடக்கிறதாம் - தமிழன்
எதிரியாய் ஒதுங்க, ஒதுங்க
யமன் வந்து உயிர் குடிக்கிறானாம்!
இப்படி இருக்கையில்
எப்படிப் பொங்குவோம்! பொங்கல்!

www.padippakam.com



எம் நிலைகண்டு தான் பொங்குவோம்!
சின்னத்திரையில் சீரியலில்
எவராவது செத்துவிட்டால்
சிந்தனையை மூழ்கவிட்டபடி
சீலைத்தலைப்பெடுத்து
துடைத்துவிட்டபடி
கண்ணீரைச் சிந்தி நிழலை
நிஜமென நம்பும்
ஜாம்பவான்களே! வாருங்கள்!

சிந்திப்போம்
சிறிது யோசிப்போம்
பொங்கல்! துமிழனின்
தலையாய தமிழர் திருவிழாதான்
இது வருடம் தவறாமல்
வந்து போகிற
எங்கள் துன்பங்கள்
இந்தாண்டோடு அது
கொண்டு போகுமென்றால்
வருகின்ற ஆண்டில் அது
வரவேண்டும் என நானும் யாசிப்பேன்!
பொங்கலைப் பூசிப்பேன்!


●

(2009 ம்ஆண்டு தைப்பொங்கல் தினத்தை
முன்னிட்டு எழுதப்பட்ட கவிதை)

படிப்பகம்

www.padippakam.com





## தம்பி போட்டானா...?

கத்தும்
கடலலை ஆர்ப்பரிக்க
நெஞ்சில்
பூத்த ஆசை சிறகடிக்க
சொத்து பத்து
வித்து,
சுளையாய்
பத்து இலட்சம் கட்டி
சொர்க்கமென்று நம்பி - தம்பி
சொகுசாய் பறந்தான்
வெளிநாடு.

சிங்கப்பூரில் சில நாட்கள்
மாஸ்கோவில்
சில மாதம்

www.padippakam.com



லெலனின்கிராடில்
ஒரு வருடமென
காலங்கள் உருண்டு
வருடங்களோ பல போன பின்னும்..

தம்பி
இன்னமும்
போய் சேரவில்லை
உருப்படியாய்
ஒரு நாடு.

"எக்கசக்கமான சனம்
திக்குத் திக்காய்
நிக்கினமாம்
அடைச்செல்ல போட்டாங்களாம்!
''போடரை''
முடிவிட்டானாம்
"ஏசென்சி''

முருக்கமரத்து
மசுக்குட்டியாகப்
பதுங்கிப்பதுங்கி
ஒளித்தது ஏனோ
அடிமரத்துக்குள்ளதான்.

எரிக்க ஒரு கூட்டம்
கொள்ளிக் கட்டையோடு
என் மனதுள்

ஒரு கேள்வி
முறியாதா? முருங்கை

படிப்பகம்

www.padippakam.com



முறிஞ்சுதான் போச்சுது.
கட்டிய மனையாளின்
கற்பனைக் கோட்டையும்
சேர்ந்து.

கட்டிய தாலியும்
விற்பனைப் பொருளாக
சாக்கடை நீராய் - அவள்
கன்னத்தில்
தேங்கியே உறைந்தது
கண்ணீர்.

முளுவியாளம் சரியில்லையோ?
மூதேவி குறுக்கறிக்குது
சீதேவி முன்னின்றுதானே..
வழியனுப்பிவைத்த
பயணமிது...
சீர் கெட்ட வாழ்க்கை
இன்னுமேன் தொடர்கின்றது

நாதாரி வெளிநாடு
வேண்டாமென்று
ஊரொடு
நின்றிருக்கலாம்
ஆனால்...
உயிரோடு இருந்திருக்கலாமா?

படிப்பகம்

www.padippakam.com



# அவலமா அழகு?

அழகு...
தேடியலையும் மனிதன்
அவஸ்தையையும்
தேடிக்கொள்கிறான்!

கோடியிரவு
இதயங்கள் பிரிந்து
மாடிவீடும் அழுதது போ
கோடி யுறவு..
உண்மைகள் புதைந்து
உள்ளங்கள் துடித்தது போ!

கொள்கை மாறி
கோலங்கள் மாறி
அவலங்கள் கூடி - புலம்
நிலை தடுமாறி!

படிப்பகம்

www.padippakam.com



அழகு சிரிக்கிறாதா..?
அவலம் சிரிக்கிறதா..?

உள்ளத்தின் அழகை
விடுத்து
உறுப்பின்
அழகைப் பார்த்து
ஊமையாய்
வாழ்வைத் தொலைத்து
தடுமாறும் மனிதா!
உள்ளத்தின் அழகிலே
அன்பும்..
வாழ்வாதாரமாய்
உண்மையில் வாழும்
அதுதான் அழகு!!

படிப்பகம்

www.padippakam.com





## பிச்சைக்காரி

ஒரு ஆணின்
இச்சைக்கு பலியான
ஒரு தாயின்
முகமறியாப் பிள்ளை தான்
இந்தப் பிச்சைக்காரி!

அன்னையோடு
ஒரு பாதையோரம்..
தன்னை மறந்து துயிலிலிருந்து
பிள்ளை - தன்னை
விட்டு அவள்
வெகு தூரம் பறந்து விட்டதை
அறியாத பருவமுல்லை!

ஒட்டிய வயிறு
தட்டிய போது விழித்து.

www.padippakam.com



தட்டிப் பார்த்தாள் தன்
தாயைக் கூவியழைத்து
கத்திப்பார்த்தாள்!
விடையயில்லா வினாவோடு
இரை தேடிப் புறப்பட்டாள்
இரங்குவார் யாருமில்லை!

தேத்தண்ணீக்கடையில்
வடை மீது கை வைத்தாள்
சூடு வைத்தான் கடைக்காரன்!
சுருண்டு விழுந்தாள்
பதை பதைத்து கழிவிலையில்
சோறு உண்டு கொண்டிருந்த
தெருவோரப் பிச்சைக்காரன்
கை கொடுத்து
கண்ணீர் துடைத்து
ஊட்டியும் விட்டான்!
பிச்சையெடுக்கும்
விதிமுறையை ஒவ்வொன்றாய்
கற்பித்து,
தனதுடைந்த பாத்திரத்தை
இனாமாக கையளித்து
வாழ்த்தி வழியனுப்பிவைக்க

கை கொடுத்த தொழிலோடு
கடைத் தெருவில்
உலா வந்தாள்
பிச்சைக்காரியாய்
இந்த மாது!

இது இவள்
தேர்ந்தெடுத்த பட்டமல்ல
தேர்தல் காலத்தில்

படிப்பகம்

www.padippakam.com



இலவசமாய் கிடைக்கும்
சட்டை!
அடுத்த தேர்தல்
வரும் வரைக்கும்
ஓட்டை விழுந்தாலும்
இது தான் பிச்சைக்காரி
மானங்காக்கும் பட்டை!

கண்ணீரை ஆயுதமாய்
காலமெல்லாம்
கையேந்தும் சீவியமாய்
வாழையடி வாழையாய்
வேறு வழியில்லா
தன்னிலை கடிந்தாலும்
போகுமிடமின்றி
வலம் வந்தாள்
கடைத்தெருவெங்கும்
பிச்சைக்காரியாய் இந்த மாது!

சோத்துக்கும் குறைவில்லை
சோகத்துக்கும் குறைவில்லை
போக்கத்துப் போன வாழ்க்கை
போகுமிடமெங்கே?

பிய்ந்து போன ''ரவிக்கை''
காற்றோடு மழையும்
வெய்யிலும் பட்டு...
சீப்பு படாமல்
நொய்ந்து போன கூந்தல்,
நைந்து போன வாழ்க்கையை
நவிலுகின்றாள் இந்த
மங்கை!

படிப்பகம்

www.padippakam.com



## இருண்ட மனம்

இரவின் தாலாட்டு
இதமானதுதான்
இரவில் மின்குமிழ்
இதமானதுதான்
இதயங்களுக்குள்ளே
இறுகும் அன்பும்
இதமானதுதான்

மனம்
மட்டும் இருண்டுவிட்டால்
வாழ்வும் இருண்டுவிடும்
இரவு நீண்டுவிடும்

உறவு விழுங்கி
உணர்வு சுருங்கி
உள்ளம் மழுங்கி
இன்பம் அகன்று
துன்பம் சூழ்ந்துவிடும்

படிப்பகம்

www.padippakam.com



## அன்பை விதை... சமாதானத்தை..?

கால நதியோரம்
காலைநனைத்தபடி...
2009-ல் நின்று கொண்டிருக்கின்றோம்!

கூக்குரலும் சாக்குரலும்
ஆணவத்தின் உச்சியில்
நின்று கொண்டு இருக்கும்
அதிகார வர்க்கத்தின்
பேய்க்குரலும்.
மனிதவுயிரை பேரம்பேசி நிற்க
2008 மட்டும் காலமாகி போனது!

நாற்காலிச் சண்டையிலே
முக்காலும் உடைந்து

www.padippakam.com



ஒரு காலில் சுழல்கிறது
தேசங்கள்!

குண்டு மழையின்
குருதியிலே..
சுழலுகின்றது
இந்த பூமிப்பிரபஞ்சம்!

கண்டும் காணதவர்களாக உலக நாடுகள்
ஆட்சியாளர்களும்
அரியாசனங்களும்

ஐநா சபையென்பது
யுத்தம் தவிர்க்கும்
ஆட்சியாளர்களின் அரங்கம்
என்றால் ஈழத்தில்
குண்டுமழையில்
சுருண்டு மடியும்
தமிழர்க்கு நீதி ஏன் பஞ்சம்!

புத்தன் யேசு அல்லா!
ஆதியுமந்தமுமில்லாத
பரம்பொருளாம் சிவன்
கோவில் தெய்வம் பூசை

ஆகம அபிஷேகங்களில்
தொடரும் சம்பிரதாயச் சடங்குகள்
தொடர்ந்து கொண்டே இருக்க
மனித வாழ்வு மட்டும்
காணாமல் போகிறது!

படிப்பகம்

www.padippakam.com



இருப்பவை இருக்க இருப்பவர்
மாண்டவர் போக - புதிதாய்
பிறப்பவர் மனதிலும்
இனத்தாலும் மதத்தாலும்
தீவிரவாதம் எனும்
வன்முறை விதைகள்!
வன்முறைக்கு வி(த்)தைகள்!
வன்முறைக்கு வன்முறைதான்
தீர்வென்றால்
நாளை உலகமே..
சுடுகாடாய் மாறலாம்!

சிந்திக்க தெரிந்த மனமே!
அன்பை விதை!
சமாதானத்தை
அறுவடை செய்யலாம் வா!

படிப்பகம்

www.padippakam.com



## கனவில் காய்த்த க(ன்)னி

மாலைக் கருக்கல்
மனதுக்கிதமான
மழைத்தூறல்..
சாலைத் தெருக்களில்
சனசஞ்சடியோடு
வாகனமும் அவசரமாய்
நனைந்தோட
குடையோடு ஒரு
மழை என்னை நனைத்தது
அவள்
கடைக்கண் பார்வையிலே
அந்த மழையிலும்

படிப்பகம்

www.padippakam.com



நகரமே பற்றியெரிவதாய்
ஒர் உணர்வு.

இடைவெளியில்லா
இறுக்கம்
இடையிடையே
இனிக்கும் சுகங்கள்
அவள் சின்ன இடை
தொட்டணைத்தேன்
இறுகியது / அன்பின்
இறுக்கம்/
விடை கொடு என்றது வெட்கம்...
விடவேயில்லை அவளிதயம்
இறுக்கியே அணைத்தபோது
திடுக்கிட்டு முழித்தேன்
எஞ்சியது
தலையணையின் பஞ்சுமட்டும்தான்

படிப்பகம்

www.padippakam.com



## வானம் சிவக்கிறது!

முழுமதியாய்
ஏற்றிவைத்த கைவிளக்கு
விடியும்வரைக்கும்
இதுதான் துணையெனக்கு...
துரத்தி வந்த கடற்காற்று
அணைத்துவிட்டு சிரிக்கிறது!

காற்றணைத்த போதினிலும்
வானம் சிவந்து - எம்
வாழ்வு சிறக்கும் என்ற
நம்பிக்கை இருக்கிறது!

குறை காணவில்லை - எதிலும்
இன்னும்!
முழுசாய்
பிறை காணவில்லை - வாழ்வில்

படிப்பகம்

www.padippakam.com



கறை படிந்த பக்கங்கள்
ஏராளம்!
பார்வையொன்றாலே..
நீதிதேவன்! கரைகளைக்
களைந்துகொண்டிருக்கிறான்!

கருவண்டு நாத்தம்!
செத்து தொலைந்து
கானகமெங்கும்
ஒளி சிந்தி...
கசியுமென்றிருக்க,

சோதனைக்கால
சோகங்கள் வரலாம்
சோர்ந்து போவதா..மனம்?

விதை கூட..
மண் கிழித்தெழும்புது!
வீணாய்
எம் வாழ்வு மண்ணில் புதைவதா?

சாவோலை கொண்டதொரு
சரித்திரப் பிரசன்னம்!
சந்ததி காத்திடவொரு
சத்தியப் பிரமாணம்!
நம்பிக்கையோடு..இருப்போம்
வானம் சிவக்கும்
வாழ்வும் சிறக்கும்.

படிப்பகம்

www.padippakam.com





# குற்றவாளிகளோ நீதிபதிகளாக!

இரத்த வாடை வீசும்
செந்தணலாய்
என் தேசம்!
சத்தியத்தை
நிலை நாட்டியதாய்
கற்பு பறித்தவனுக்கு
பட்டமளிக்கும்
கூத்துக்கள்.

நிரபராதிகளோ..
குற்றவாளிகளாய்!
குற்றவாளிகளோ
நீதிபதிகளாய்!

www.padippakam.com



நித்திய வாழ்வே
நிற்கதியாக
உண்மை செத்து
உறவைக் தொலைத்துக்
கூனிக்குறுகுது
ஓர் இனம்!

“யாரொடு நோக
யார்க் கொடுத்துரைக்க...?
மௌன விழிப்
பார்வைகாளல்..
அழும் மனச்சாட்சிகள்
தான் இதற்கு சாட்சி..!

படிப்பகம்

www.padippakam.com





## தலைவி(தி)யை நோவதா...?

கை பிடித்தும்
என்னில் காதலில்லை உனக்கு...
கால் பிடித்தும் நீ
கசியவில்லை எனக்கு.

அன்பு என்ன
கடையில் வாங்கும்
சரக்கா?
காதலில்லாமல் சுரக்க!

உப்பும் புளியும்
சேர்ந்தால் தான்
கறி சுவைக்கும்.
நல்லதும் கெட்டதும்

www.padippakam.com




இருந்தால்தான்
வாழ்வினிக்கும்
காதலும் காமமும்
இருந்தால்தான்
உறவினிக்கும்.

இரு உள்ளங்கள்
ஒருமித்து
உடலில் இன்பம்
தருவித்து
அன்பினில் இணைவதே
தாம்பத்ய வெற்றி
கோப கொண்டாலும் - கொண்டவனைக்
கோபக்குணமாய் தள்ளினாலும்
நாம் நேசிப்பவளிடம்
அன்பை யாசிப்பதே
அன்றாடவேலையானபின்
உள்ளமும் உணர்வும் தேய
கடமையில் நீளும்
வாழ்வு நரகம்!
தலைவிதியை நோவதா?
தலைவியை நோவதா?
உண்மை அன்பு
ஒன்றுக்குத்தான் வெளிச்சம்!

படிப்பகம்

www.padippakam.com





# கனவு மெய்ப்பட வேண்டும்

ஆலமரத்தில்
கூடு கட்டி,
ஆடியசைந்து
வாழ்வு தொடங்கு முன்னம்
சாவு வந்து
சேதி சொல்ல
அண்டங்காகத்துக்கு
பயந்து
கூடுவிட்டு தூரப்பறந்து
ஓடியொளிந்து

அறுந்த கழுத்து
மணிமாலைகளாய்
கண்டம் தாண்டி
துண்டம் துண்டமாய்

www.padippakam.com



சிதறுண்டாலும்
உணர்வொன்றாய் ஆக
அகதித் தமிழர் - நாம்!
இனமொன்றாய்
இணைக்கும் கரமொன்றாய்
இலட்சிய கனவொன்றாய்

எம் வாழ்வை மீட்டு
மீண்டும்
எம் நித்திய வாழ்வில்
நிம்மதியான
நித்திரைப்பாயில்
கதிரவன் வந்து
தட்டியெழுப்பிடும்
கால் சூட்டில்
கண்விழித்தெழ வேண்டும்

வேப்பங் குச்சி முறித்து
பல் துலக்கியபடி
பொதுக் கிணத்தின்
துலாக் கொடியைப் பிடித்தபடி
ஊர்ஞாயம் பேச வேண்டும்!

உலக அரங்கில்
அகதிகளாய் - நாம்
பட்ட இன்னல்களை
மணிக்கணக்காய்..
சொந்தங்களோடு
பேசி
மனம் ஆற வேண்டும்
அதற்கு,
கனவு மெய்ப்பட வேண்டும்!

படிப்பகம்

www.padippakam.com



# மனிதத்தை மதித்திடும் மானிடங்கள்!

வந்தாரை
வரவேற்கும் டென்மார்க்
வாசல் நுழைந்தாரை
கவர்ந்திழுக்கும் தேன் கூடு!

ஏதிலியாள் வந்த
எமக்கு
ஏற்றமிகு
வாழ்வமைத்த
மனிதத்தை
மதித்திட்ட மானிடங்கள்.

அலை கொஞ்ச - பனிக்
கடல் கொஞ்ச
எழில் மிஞ்சும்

படிப்பகம்

www.padippakam.com



கோபுரமாய்
ஏழு கடல்
தாண்டியவர்க்கு
தங்க மோதிரம்.

பிரிவொன்றைத் தவிர
வேறு என்ன குறை
வைத்தார்.
பிரியமுடன்
அனுசரிப்பதில் - எம்மை
விஞ்சி நின்று
வியப்பைத்தந்தார்.

எமக்கு
எளியாரைக்
காணாத இவ்வுலகில்
ஏழிசையாய்

தலைகாட்டும் பல்லிங்கள்.
ஏற்றங்கொண்ட
தமிழரிங்கு
ஏற்றி வைத்தார்
பல கலை விளக்கு.

பனியாறு
ஓடும் திருநாட்டில்
இரவு பகலாய்
ஓடும் உறவுகளே,
பணியாது
தொடர்வோம்! தமிழ்ப் பணி
தரணியெங்கும்

படிப்பகம்

www.padippakam.com



தமிழ் முழக்கம் பரவட்டும்
மனிதநேய தனிச்சட்டம்
அங்குலம் பிசகாத
அரசாட்சிப்
பாங்குடனே..
வாழும் தமிழரெல்லாம்
தமிழ்
பண்பாட்டை
போற்றுகின்ற
தந்தை இல்லம்.

உழைப்பின் கரங்கள்
உன்னத புயங்கள்
பிழைப்புக்கே...
வழி சொன்ன
பெட்டகச் சுரங்கம்
வாழட்டும்

"பயிருக்கிறைத்த நீர் வாய்க்கால்
வழியோடி புல்லுக்கும் கொஞ்சம் பொசியட்டும்."

படிப்பகம்

www.padippakam.com



# வெண்துணலில் நடக்கிறது வெண்ணிலவு!

ஆண்டு 2004 ம் ஆண்டு
மார்கழிப் பின்னிரவு 25
ஒற்றையடிப் பாதையிலலே..
நின்றபடி - அந்த
வெண்ணிலவுக்காய்
காத்திருந்தேன்.

ஏக்கமுடன்
வெறிச்சோடியிருந்தது
வானம் மட்டுமல்ல..
என் இதயமும் தான்.

படிப்பகம்

www.padippakam.com



பலயிரவு ஒன்றாய்
அவளுடன் களித்து மகிழ்ந்த
சுகம் என்னை மேலும்.
காக்க வைத்தது.

என்ன சுணக்கமோ?
ஒரு வேளை முன்னிரவே
வந்து போயிருப்பாளோ?
இருக்காது
என்னை சந்தியாமல்
போக
அவள் மனம்
இடங் கொடுத்திருக்காது.

தினம், தினம்
நடந்து பழகிய
அந்த இரவு புதிதில்லை
இருவருக்கும் -ஆனால்
அவள் அன்று கண்டு வந்ததுதான்
சோகத்துக்கும் காரணம்.
துறையினில் புகுந்து
பல ஊரையே தின்ற சுனாமி
அவளதை நேரில் வானில்
நிண்டு பார்த்ததினால் தான்
இந்த சோகம்.

''பேச முடியாப் பாவியாக
குற்றவுணர்வில் கூனிக்குறுகி
நிற்கிறது வெண்ணிலவு.''

ஏனெனில்
''கடலினடிப்பாறை ஒன்றுதான்

படிப்பகம்

www.padippakam.com



தனது கருவறையென்பதில்
வெட்கிப்போய் விட்டது போலும்''

மீண்டுமந்த ஊருக்கு போக
தயக்குமுடன்..
முகிலுக்குள் ஒளிந்து கொள்கிறது
வெண்ணிலவு.
மறுத்தாலும் முடியாது!
போக வேண்டிய விதி இவளுடையது
வெந்தணல் மேலே நடக்கின்றாள்...

படிப்பகம்

www.padippakam.com





# இது ரோஜாவனம்!

யுத்தமில்லாப் பூமி
பூக்களாய் சொரிகிறது
சத்தமின்றிய் அமைதியில்
நிசப்தம் மட்டும் வாழ்கிறது.

இரத்தமில்லாக் காயம்
மனதுக்கள் மட்டும்தான் சோகம்!

இரவும் பகலும்
ஒன்றிங்கு
ஆணும் பெண்ணும்
சமம்.
இது போல
நம் தேசமும்
ஆகிடாதா?
என்ற ஏக்கமும்
தவிப்பும் வரும்.

www.padippakam.com



போர்
மேகம் சூழ
பூவெல்லாம்
புயலாக...
நம் தேசத்து குயில்களின்
இராகம் கேட்க முடியவில்லை
ஆனாலும்
கூவும் சத்தம் கேட்கிறது
அவை
பாலைவனத்திலும் வாழும்
பாழும் வனத்திலும் வாழும்
ரோஜா வனத்திலும் வாழும்
இது ரோஜா வனம்.

படிப்பகம்

www.padippakam.com



# நாம் எதை அழகென்போம்?

கடல்
அழகாய்தானிருந்தது,
வீடே கடலாய்
ஆகும் வரைக்கும்!
மேகமும்
அழகாய்த்தானிருந்தது
தலையில்
பொறிந்து விழாதவரைக்கும்!
காற்றும்
அழகாய்த் தானிருந்தது
அது
சூறாவளியாய்
சுழண்டு வீசாதவரைக்கும்
வாழ்வே
இடிந்து போகும் நிலையில்
எதை
அழகென்போம்?

படிப்பகம்

www.padippakam.com



# வறட்டு சமுதாய வரையறைக்குள்!

அற்ப ஆசைகளால்
உணர்ச்சியற்று போன இதயம்
அன்பெனும்
ஆதாரக்கொப்பில்
நின்று கொண்டு
சுயநலம் தேடி,
வறட்டு சமுதாய
வரையறைக்குள் நின்று
உண்மையை எதிர்கொள்ளப்பயந்து,
அப்பாவித்தனமான
சில வறட்டு
கௌரவ விசும்பல்களால்
பெயர், பித்தலாட்டம்
மௌனத் தலையாட்டல்கள்.

படிப்பகம்

www.padippakam.com



இன்னொரு தவறுக்கான
வடிகால்களாகி
பலரது வாழ்வை
கேள்விக்குறியாக்கிவிடுகின்றன.
அன்புக்குரியவர்களே!
விழித்துக்கொள்ளுங்கள்
நம்பிக்கையத்திவாரங்கள்
அசைத்துப் பார்க்க
வேண்டியதில்லைத்தான்
ஆனாலும்
விதி என்ற ஒரு சொல்லில்
முடிந்து விடுவதில்லை
வாழ்க்கை.!

படிப்பகம்

www.padippakam.com



## பனையரசன்...!

காற்றுவாக்கில் பூத்து
கோடி கண்கள் பாத்து
ஊர் போற்ற
உயரமாய் வானளர்ந்த கட்டழகன்.
நீருற்றாமலேயே
நெடுவானுயர்ந்த பனையரசன்.

மாட்டுக்கும் தீனி
மனுசருக்கும் தீனி
தீக்கும் நீதான் தீனி
திரவியமாய் தின்னுவோம்
நீ தந்த பனங்காய் பாணி

வீடு கட்ட கூரையாய்.
நாடு காக்கும் வீரனுக்கு
காப்பரன் ஏணியாய்

படிப்பகம்

www.padippakam.com



போதைக்கு கள்ளாய்
போகத்துப் படுக்கையாய்
போகுமிடமெல்லாம்
ஏட்டுக்கு ஓலைச் சுவடியாய் ஆனவன்தான்
ஏற்றமிகு பினை அரசன்!

இன்றைய போர் வானில்
கொஞ்ச வேர்த்து
நாளைய தமிழர் வாழ்வின்
நம்பிக்கையை விதைத்து
கற்பகத்தருவென்று
நீ சுற்றமாய் வாழுமில்லம்.
எப்பகை வரினும்
வீரத்தமிழனைப்போல்
நிமிர்ந்து நிற்கும் வீரன்..!

படிப்பகம்

www.padippakam.com



# இனங்கண்டு கொள்...!

பல்லையிளிக்கின்றரெல்லாம்
நட்பல்ல
பழகிப்பார்த்தவர்
உள்ளம் ஜெயிப்பதே
நட்பு,

சுயநலங் கொண்ட
சூறையாய்
சுழண்டு வீசி
ஏணியாய், - அவன்
காலைப்பிடித்து
உயரத்தில் ஏறிவிட்டபின்
எட்டியுதைத்திடும்
நன்றி கெட்ட
நட்பைப் பெற்றவன்

படிப்பகம்

www.padippakam.com



ஊமையாய் இன்னமும்
உறங்கிக் கிடக்கிறான்.!

அன்னப்பட்சி போல்
அலசிப்பார்த்தபின்
பின்னிப்பதேன்
நட்புடன் பழக,
பழகிவிட்டபின்
முன்னிற்பதேன்
முனைப்புடன் பிரிய
மிருக குணத்தை
மனித குணமாக்கும்
நல்ல நட்பு!
மனித குணத்தை
மிருக குணமாக்கும்
தீய நட்பு!
கசந்தாலும்
தொடரும் தூய நட்பு!

படிப்பகம்

www.padippakam.com



# எனக்கு பிடித்தது...!

எனக்கு பிடித்தது
அவள் அழகு - அது
அவள் ஆணவம்
கொள்ளாத வரைக்கும்!

எனக்கு பிடித்தது
அவள் கூந்தல் -அது
அவள் சலூனுக்கு
போகாதவரைக்கும்!

எனக்கு பிடித்தது.
அவள் ஆடை - அது
அவள் உடலை
காட்டாத வரைக்கும்

எனக்கு பிடித்தது
அவள் அன்பு-அது
அவள் வேறொவன் மீது
வைக்காதவரைக்கும்...

படிப்பகம்

www.padippakam.com



## சுமை

தரணியிலே
தவழுமுன்னம் கருவறையில்
தாய்க்கு சுமை!
மண்ணிலே
விழுந்து விட்டால்
பாய்க்குச்சுமை

பள்ளிக் காலம்
படிப்பதில் சுமை!
இளமைக் காலம்
காதலிப்பதில் சுமை!
தாரமென்று சுமை!
தாரமென்று வந்தவரும்
தருணத்தில் சுமை!
முதுமையென்று வந்தபோது
நமக்கு நாமே சுமை!

படிப்பகம்

www.padippakam.com



சுமையின்றி வாழ்வில்லை
வாழ்வே சுமையென்றால்
சுவையில்லை!
சுமைகளையும்
சுகமாக்குவது தான்
வாழ்க்கை

அன்னிய மண்ணில்
அகதி வாழ்வில் மையால்
எழுதப்படாத ஒரு
அடிமை சாசனம் கண்ணீரால்
எழுதப்பட்டுக் கொண்டிருப்பதும்
ஒரு சுமைதான்!

படிப்பகம்

www.padippakam.com



## வாழவிடு

புற்றுநோய் உயிர் காக்கும் நிதிக்காக
2005ல் டென்மார்க் கேணிங் நகரில்
இடம்பெற்ற ஒரு விழாவில் பாடப்பட்ட
கவிதையிலிருந்து...

●

ஆதியும் அந்தமுமில்லா
அரும்பெரும் சோதியே...
பட்டு மேனி விரிப்பில் - நீ
கட்டிய பட்டுக்குஞ்சத்தை
பாதியில் அவிழ்தெறிந்து விடாதே
நட்சத்திர வானில்

பூத்த
விடிவெள்ளியையே!

படிப்பகம்

www.padippakam.com



விடிவதற்கு முன்னால்
வீழ்ந்து விடாதே

பற்று
வைத்தவர்களையெல்லாம்
பரிதவிக்க வைக்கும் - இந்த
புற்று நோயை.
உலகை விட்டே
துரத்திவிடு. இறைவா..!
ஊடுருவ முடியாமல் அழித்துவிடு இறைவா!

விண்ணைத் தொடும் விஞ்ஞானமே
இன்னும் உன்னைத் தொடவில்லையோ!
கற்பனைக் கோட்டை கலைந்து
காருண்ய மனுகொடுத்து
விற்பனையில்லாப் பண்டம் போல்
வாழ்வு தொலைத்து.
பச்சை மரங்கள் கூடப்பட்ட மரங்களாய்.

வெட்டித்தறிக்கின்ற
கறையான் புற்றைப் போல்

தலையைக் காட்டிய
கொம்பறி மூக்கனே!
தொலைந்து போய்விடு

சொர்க்கத்தில் வாழ்வு வேண்டாம் - வாழும்போதாவது
சொந்தங்களோடு - எம்
உறவுகளை கொஞ்சம் வாழவிடு
அழகுவண்ண
பூக்கள் கொண்ட மாலைக்குள்
சில வண்ணப் பூக்களை

படிப்பகம்

www.padippakam.com



மட்டும் தேடிக் கருக்காதே
அழகிழந்த மாலைகளும்
நிலைகுலைந்த
பூக்களோடு அழுகின்றன

வாடிய பூக்களை
தளிர்த்திடவைக்க உன்னால்தான்
முடியும்
உன் பாதைக்கே வரவில்லை
எங்கயாவது ஒரு
ஓரமாய் வேலிகளில்லாவது
வாழ்ந்துவிட்டு போகட்டுமே...
விட்டு விடு
வாழவிடு!

நம்பிக்கை வைப்போம்
நம்பிக்கை வைத்தால்
நோயென்ன பேய் கூட ஓடும்! தன்னால்
அவ நம்பிக்கை கொண்டால்
பேயென்ன
நோய் கூட ஏறும்
உன் பின்னால்!

படிப்பகம்

www.padippakam.com



## கடவுளுக்கு ஒரு மின்னஞ்சல்...!

கடிதமெழுதி பதிலில்லை
தொலைபேசியில் அழைத்தும்
பலனில்லை
என்ன நடந்தது
ஊருக்குள்
என்ன ஆனது உறவுக்கு..?

உலகமெங்கும்
நீதி கேட்டும் - அது
கிடைக்கவில்லை அதுதான்
கடவுளே..!
உனக்கிந்த மின்னஞ்சல்..!

உன் கோவிலும்
அங்கிருக்கிறது

படிப்பகம்

www.padippakam.com



பூசைகளில்லாமல்
கடவுளே!
நீ எங்கே இருக்கிறாய்?
நீ ஒளிந்து கொள்ள
உனக்கிடமிருந்தால் நாம்
எங்கே போய் ஒளிந்து கொள்வது?

பூக்கும் பூக்களைக் கூட
உனக்கு சாத்தத்தடையாமே
தமிழனென்னத்
தீண்டத்தகாதவனா?
பறிக்காத பூக்கள்
பிணமாகத் தானே..
இருக்கின்றன மரத்திலே

நீ
மனிதனைக் கண்டு பிடித்தாய்!
மனிதன் விஞ்ஞானத்தை
கண்டு பிடித்தான்!
மனிதன்
கண்டு பிடித்த விஞ்ஞானம்
மனிதனையே கொன்று குவிக்கிறது
பார்த்தாயா?

ஈட்டி அம்பு கொண்டு
மிருக வேட்டை நடத்திய
மனிதன் இன்று
துப்பாக்கிகளும் குண்டுகளும் கொண்டு
மனித வேட்டை நடத்துகிறான்
பார்த்தாயா?
மிருகங்கள் வாழும்
காடுகள் அமைதியாக இருக்க

படிப்பகம்

www.padippakam.com



இப்போ நாடுகளில்தான்
மனித மிருகங்களின்
சண்டை தீவிரமாயிருக்க
நீ என்ன வேடிக்கை பார்க்கிறாய்!

ஒவ்வொரு பிறப்புக்கும்
அர்த்தமுண்டு அல்லவா?
அர்த்தமில்லாத பிறப்பை
பிறகேன் சிருஷ்டித்தாய்?
இப்பிரபஞ்சத்தில்!
மொட்டாக இருக்கும்
பூக்கள் கூட
கருகிக்கிடக்கின்றன
பார்த்தாயா?

இந்த மின்னஞ்சலில்
இவ்வளவுதான்
என்னால் சொல்லமுடியும்!
உன்னால் தான் முடியும்
கருணை வை இறைவா!
முடித்துவை!

படிப்பகம்

www.padippakam.com



## எம் தேசம்

கதிரிருந்தும்
இருள் சூழ்ந்து,
நீரிருந்தும் நிலம் வறண்டு
நிலவிருந்தும் ஒளி மறைந்து,
பூ இருந்தும்
புயல் வீசும் புதிரான
ஒரு நாடாய்....
எம் தேசம்!

வீதியில் அடிபட்டிறந்த
பூனையைத்தூக்கி
மடிதனில் வைத்தழுகின்றாள்
வெளிநாட்டில் ஒரு மாது.

பாதியுயிர்
துடிக்க, துடிக்க
வீதியில் சிக்கும்

படிப்பகம்

www.padippakam.com



மனித உயிரை பார்த்தும்
பாரா முகமாய்
எம் தேசத்திலே...

வேலியில்லா வெள்ளாமை!
விளைந்தும் பலனில்லாமை!
வங்கக்கடலாக ..
ஓடுது தமிழன்
இரத்தம் ஆறாய்!

கிளிகூட
வாழ்வதற்குண்டு ஒரு கூடு!
தமிழன் வாழ்வதற்கில்லை ஒரு நாடு!

படிப்பகம்

www.padippakam.com



## மறுமலர்ச்சி

புண்பட்ட
மனதைப் பண்படுத்தி
விதையெனும் நல்லெண்ணத்தை
மறுமலர்ச்சி கொண்டு விதை!
முகில் போல விலகும் இருள் தன்னால்!

பட்டமரம் துளிர்ப்பதுமில்லை
சுட்ட பிணம் உயிர்ப்பதுமில்லை
புண் பட்ட மனம்தான் ஜெயிக்கிறது
புது வரலாறும் படைக்கிறது.

எண்ணமெனும் கோட்டையிலே
ஏற்றி வைத்த
கொள்கை விளக்கு

படிப்பகம்

www.padippakam.com



எரிவதற்கு
எண்ணையின்றி
என் மனதுக்குள் இருள் கணக்கு!

இருளகற்றி நெடுவான் - கதிர் போல
ஒளி சிந்தி
புத்துணர்ச்சி பெற வேண்டும்

படிப்பகம்

www.padippakam.com



## போதும்

பூவுக்கு வண்டு 'போதும்
புன்னகைக்கு உணர்வு போதும்
எறும்புக்கு தீனி போதும்
மரத்துக்கு நீர் போதும்
மானுக்கு இலை போதும்
வண்டுக்கு தேன் போதும்
மனிதனுக்கு எது போதும்?

போதுமென
நினைத்தவன் ஞானி - அவன் தான் அன்பால்
புவனமெங்கும் ஆளுகின்ற சாமி - ஆனால்
சாமி வேடமணிந்த சில ஆசாமி
போடுகின்ற வேடமதில்
ஊசலாடுது பூமி!

போதுமடா சாமி!
பொய் வேடதாரிகளை
அடையாளம் காமி!

படிப்பகம்

www.padippakam.com



## ஆலயம்

வாழ்க்கைத் துணையைத் தேடும்
வசந்த மண்டபமல்ல,
கண்ணடித்து காதல் செய்யும்
கர்ப்பக் கிரகமல்ல,
கடலைக் கொட்டைக்கொறித்து
வம்பிழுக்கும் மடமல்ல!
உடுத்தி ..
இருப்பதை மற்றவருக்கு
காட்டுமிடமுமல்ல
நினைவை
ஒருமுகமாய் இருத்தி
நிம்மதியைத் தேடுமிடம்!
ஆன்மாவை அமைதியாக்கி
ஆத்மீகத்தை தேடுமிடம்.

படிப்பகம்

www.padippakam.com



## என் நினைவுப் பொக்கிசம்!

நெருப்புக் காற்று வீசியது
நெஞ்சம்
நெருஞ்சி முள்ளாய்
குத்தியது.

வெறுப்பு!
என் வாழ்வில் வந்து
மௌன யுத்தம் நடத்தியது.

ஊரோ ..
பிணக் காடாய்!
சொந்தங்களெல்லாம்

படிப்பகம்

www.padippakam.com



எரிந்த கொள்ளிக் கட்டைகளாய்!
நீ ...
மட்டும் கையாலாகத ...
எச்சமாக ...
அகதியாய் ...
வாழ்வதில் என்ன அர்த்தம்!

அன்றொருநாள்
ஆவலற...
முருங்கை முறிய
ஆட்கூட்டி கூக்குரலிட்டு
வாழ்ந்து முடித்தாரை
உறவின் கூடி
வழியனுப்பும் சம்பிரதாயம்
நடந்தேறும்.

பச்சையோலை வெட்டி
பாய் பின்னி..
பல்லாக்கு கட்டி
கன்னி வாழைக்கயிற்றோடுக்கட்டி
குருத்தோலை தலையசைக்க

உறவெல்லாம் கூக்குரலாய்
நினைவெல்லாம் நிழலாட
நீர்க்குமிழி வாழ்வினிலிலும்
நியமம் சொல்லும் சொந்தங்கள்.

என் மனக் கண்ணில்
நிழலாட ...
இப்போ

படிப்பகம்

www.padippakam.com



நியதமாகிப்போன... அவலங்கள்
என் தேசத்தின்,
எச்சங்களாய்
புல்லும் புதருமாய்
பூட்டிய கதவுடன்...
செல்லடித்துடைந்த ஓட்டைச் சுவருடன்
சிதறிய ...
ஓடுகள் சிரித்து வரவேற்க
அந்த பாழடைந்த வீடுதான்
என் நினவுப் பொக்கிசம்!

படிப்பகம்

www.padippakam.com



## மௌனம்...!

ஒரு
நிமிடம் நின்றால்
சம்மதம்...
இரு
நிமிடம் நின்றால்
துக்கம்...
அதிக நேரம் நின்றால்
இம்சை...

படிப்பகம்

www.padippakam.com



## விதி!

கிராமத்து பூ
ஒன்று மாலையானது
நகரத்து
வீடொன்றில் தான்

வானத்துக் காற்றும்
வசதி பார்த்து
வீசுவதில்
வியப்பொன்றுமில்லைத்தான்

படிப்பகம்

www.padippakam.com



## போர்

விடியவில்லை
வாழ்வில் - புது
விடிவுமில்லை
வானில்!

முடிவுமில்லை
தீர்வில் - போர்
முடியவில்லை
இலங்கைத் தீவில்!

படிப்பகம்

www.padippakam.com



## மனசாட்சி!

உண்மைகள் - சில
ஊமையாகிக் கொண்டிருக்க
பொய்கள்
காலத்தின் நடுவே
ஊர்வலங்கள் நடத்துகிறது

மனச்சாட்சி - அது
வெளிச்சமாகத்தான்
படம் போட்டு காட்டுது!
உள்ளத்தினுள்ளேயும்!

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



இந்த கவிஞனின் அக்னி எழுத்துக்கள்
ஈழக் கவியரசர் காசி அனந்தனின் கவிதா
நெருப்பு அணைந்துவிடாமல் பற்றித் தொடரும்
பாதையில் பயணப்பட்டிருக்கிறது. சக்திதாசன்
போன்ற உணர்ச்சி கவிஞர்கள்
புலம் பெயர் வாழ்வில் நம் தமிழ் ஈன்ற
கவிப் போராளிகள்.

ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமை
போராட்டங்களை அனுபவ பூர்வமாய்
எடுத்தியம்பும் இவன் கவிஞன் மட்டுமல்ல
சமூக அறிவியல் விஞ்ஞானி.

■ **இயக்குநர் பாரதி மோகன்**

படிப்பகம்